இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 97 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 30 – வியாழக்கிழமை 16 நவம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 97: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 30 - Thursday 16 November 2023 - Chennai 12 Pages ₹ 5.00

## காசிமேடு கடற்கரைப் பகுதியை மேம்படுத்துதல் உள்ளிட்ட

# ரூ. 150 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள்!

## சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, நவ. 16-**

**சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூ.150.05 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 150 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம், மாற்றுத்திறனாளி களுக்கான மறுவாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம், உள்விளையாட்டு அரங்கம், பூங்கா, பேருந்துநிலையம் மற்றும் காசிமேடு கடற்கரை பகுதியை மேம்படுத்தும் பணி ஆகிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

சென்னை பெருநகரப் பகுதியின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு விரிவான திட்ட மிடல் தேவை என்பதை உணர்ந்து 1972ல் மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற பெயரில் தற்காலிக அமைப்பாக இருந்து, பின்னர் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழ் சட்டப்பூர்வ குழுமமாக மாற்றப்பட்டது.

சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைகேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், நிலவகைப்பாடுகளில் உபயோக மாற்றங்களை முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் செயல்படுத்தி வருகிறது.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 150 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பேருந்து நிலையம், மாற்றுத்திறனாளி களுக்கான மறுவாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம், உள்விளையாட்டு அரங்கம், பூங்கா, பேருந்துநிலையம் மற்றும் காசிமேடு கடற்கரை பகுதியை மேம்படுத்தும் பணி ஆகிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த வகையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், வெண்பாக்கத்தில் 97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையம், அம்பத்தூர் பேருந்து நிலையத்தில் 13.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி, கொண்டித்தோப்பில் 11.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம், கோயம்பேடு சாலை சந்திப்பில் 10.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள இயற்கை வனப்புடன் புதிய பூங்கா, மயிலாப்பூர், முண்டகக் கண்ணியம்மன் கோயில் அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் 8.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய உள்விளையாட்டு அரங்கம் மற்றும் காசிமேடு கடற்கரை பகுதியில் 8.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடற்கரை பகுதியை மேம்படுத்தும் பணி;

என மொத்தம் 150 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேற்கொள்ளப் படவுள்ள திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## மறைவுச் செய்தியால் துடிதுடித்துப் போனேன் - சுதந்திரப் போராட்ட தியாகி

# தோழர் சங்கரய்யாவின் வாழ்க்கையும், தியாகமும் வரலாற்றில் நிலைத்து நிற்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் உருக்கம்!

**சென்னை, நவ. 16 -**

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும் தமிழக அரசின் தகைசால் தமிழர் விருது பெற்றவருமான என்.சங்கரய்யா அவர்களின் மறைவுச் செய்தி அறிந்ததும் “துடிதுடித்துப் போனேன் - சுதந்திரப் போராட்ட தியாகி தோழர் சங்கரய்யாவின் வாழ்க்கையும், தியாகமும் வரலாற்றில் நிலைத்து நிற்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் உருக்கமுடன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தகைசால் தமிழர் - முதுபெரும் பொதுவுடைமைப் போராளி - விடுதலைப் போராட்ட வீரர் தோழர் என்.சங்கரய்யா அவர்கள் மறைந்த செய்தியால் துடிதுடித்துப் போனேன். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர் விரைந்து நலம் பெற்று விடுவார் என்றே நம்பியிருந்த வேளையில் அவர் மறைந்த செய்தி வந்து அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்தது.

மிக இளம் வயதிலேயே பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு, 102 வயது வரை இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்துக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் வாழ்ந்து மறைந்த தோழர் சங்கரய்யா அவர்களின் வாழ்க்கையும் தியாகமும் என்றென்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

### ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கி மகிழ்ந்தேன்!

மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவராக இருந்தபோதே விடுதலை வேட்கையோடு மாணவர் சங்கச் செயலாளராகப் போராட்டங்களை முன்னெடுத்தவர் தோழர் சங்கரய்யா அவர்கள். அவரது தேசியம் சார்ந்த செயல்பாடுகளால் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டு படிப்பைத் துறந்தவர். இந்தியா விடுதலை பெறுவதற்கு 12 மணி நேரத்துக்கு முன்னர்தான் அவர் விடுதலை செய்யப்பட்டார். இப்படிப்பட்ட விடுதலைப் போராட்ட வீரருக்கு 2021ஆம் ஆண்டு விடுதலை நாளினை முன்னிட்டு நேரில் சென்று முதல் ‘தகைசால் தமிழர்’ விருதை வழங்கியது எனக்குக் கிடைத்த வாழ்நாள் பேறு! விருதோடு கிடைத்த பெருந்தொகையைக் கூட கொரோனா நிவாரண நிதிக்காக அரசுக்கே அளித்த தோழர் சங்கரய்யா அவர்களின் மாண்பால் நெகிழ்ந்து போனேன்.



**பொதுத் தொண்டே வாழ்க்கையென வாழ்ந்த இச்செஞ்சட்டைச் செம்மலுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மூலமாக மதிப்புறு முனைவர் பட்டம் வழங்க ஆவன செய்யப்படும் என இந்த ஆண்டு ஜூலை 15 அன்று நான் அறிவிப்பு செய்திருந்தும், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியாத - குறுகிய மனம் படைத்த சிலரது சதியால் அது நடந்தேறாமல் போனதை எண்ணி இவ்வேளையில் மேலும் மனம் வருந்துகிறேன்.**

தோழர் சங்கரய்யா அவர்கள் ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்து நினைவுகூரத்தக்க பல பணிகளை ஆற்றியவர். தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராக விளங்கிய சங்கரய்யா அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவுற்றபோது, அவரது இறுதிப்பயணத்தைக் கண்டு கண்கலங்கிய காட்சி இருவருக்குமான நட்பைப் பறைசாற்றியது!

### பொதுவுடைமை இயக்க வரலாற்றில் தவிர்க்க முடியாதவர்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலும் அதன் பின்னர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலுமாக இருந்து அவர் நடத்திய போராட்டங்களும், தீக்கதிர் நாளேட்டின் முதல் பொறுப்பாசிரியர் முதலிய பல்வேறு பொறுப்புகளில் ஆற்றிய செயல்பாடுகளும் தமிழ்நாட்டின் பொதுவுடைமை இயக்க வரலாற்றில் அவரது தவிர்க்க முடியாத ஆளுமையை வெளிக்காட்டும்.

பொதுத் தொண்டே வாழ்க்கையென வாழ்ந்த இச்செஞ்சட்டைச் செம்மலுக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மூலமாக மதிப்புறு முனைவர் பட்டம் வழங்க ஆவன செய்யப்படும் என இந்த ஆண்டு ஜூலை 15 அன்று நான் அறிவிப்பு செய்திருந்தும், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியாத - குறுகிய மனம் படைத்த சிலரது சதியால் அது நடந்தேறாமல் போனதை எண்ணி இவ்வேளையில் மேலும் மனம் வருந்துகிறேன்.

### அப்பழுக்கற்ற தியாக வாழ்வுக்குச் சொந்தக்காரர்!

தகைசால் தமிழர், முனைவர் மட்டுமல்ல, அவற்றிற்கும் மேலான சிறப்புக்கும் தகுதி வாய்ந்த போராளிதான் தோழர் சங்கரய்யா அவர்கள். சிறப்புகளுக்கு அவரால் சிறப்பு என்று சொல்லத்தக்க அப்பழுக்கற்ற தியாக வாழ்வுக்குச் சொந்தக்காரர் அவர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2023) சென்னையில் உடல்நலக் குறைவால் காலமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யா அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் மற்றும் சங்கரய்யா குடும்பத்தினர் உள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் தோழர் சங்கரய்யா அவர்களின் மறைவு எப்போதும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது அனுபவமும் வழிகாட்டலும் இன்னும் சில ஆண்டுகள் கிடைக்கும் என எண்ணியிருந்த எனக்கு அவரது மறைவு தனிப்பட்ட முறையிலும் பேரிழப்பு.

சாதி, வர்க்கம், அடக்குமுறை, ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக வாழ்நாளெல்லாம் போராடிய போராளி சங்கரய்யாவை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், பொதுவுடைமை இயக்கத் தோழர்கள், பல்வேறு அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரராக, சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் கட்சித் தலைவராக அவர் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாக அவரது திருவுடலுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 16-11-2023

# ஒரு கோடியே 13 லட்சம் பேர்

ஒரு கோடி மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கிடைக்கும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் சொன்னார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆனால் இன்றோ அதன் எண்ணிக்கை ஒரு கோடியே 13 லட்சம் ஆகிவிட்டது. அடுத்து விண்ணப்பித்துள்ளவர்களது விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து வருகிறோம், அவர்களிலும் தகுதி உள்ளவர்களுக்கு நிச்சயம் உரிமைத் தொகை வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்பது சாதாரணத் திட்டமல்ல. மகளிர் குலத்தின் மாண்பை மட்டும் உயர்த்தவில்லை, அவர்களை சமூகப் பொருளாதாரத்தின் அனைத்து வகையிலும் உயர்த்தி வருகிறது. அதனைத்தான் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்த மிக முக்கியமான ஐந்து திட்டங்கள் பெண்ணினத்தை உயர்த்தி வருகிறது.

**1. மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதி. இந்தத் திட்டத்தின் மூலமாக மாதம் தோறும் 600 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரையிலும் மகளிர் சேமிக்க முடிகிறது. பேருந்துக் கட்டணத்துக்கு வழியில்லாமல் வேலைக்குச் செல்லாமல், வீட்டுக்குள் முடங்கிக் கொண்டு கிடந்த பெண்களை இது வெளியில் வர வைத்து, அவர்களையும் சமூகப் பங்களிப்பாளர்களாக ஆக்கியது இந்த அறிவிப்பு.**

**2. அரசுப் பள்ளியில் படித்துவிட்டு உயர் கல்விக்கு வரும் மாணவியர்க்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டமானது, ஏழை எளிய விளிம்பு நிலைக் குடும்பத்து மாணவிகளை கல்லூரிக்குள் தைரியமாக வர வைத்து விட்டது.**

**3. பள்ளிக் குழந்தைகளுக்காக காலைச் சிற்றுண்டித் திட்டத்தின் நேரடிப் பயனாளிகள் மாணவச் செல்வங்களாக இருந்தாலும், அவர்களது பெற்றோர் கவலையை இது தீர்க்கிறது. அதிகாலையில் தானும் வேலைக்குச் செல்லத் தயாராகி, தங்களது பிள்ளைகளுக்கு உணவும் தயாரித்துத் தரும் சுமையைக் குறைக்கிறது இந்தத் திட்டம்.**

**4. இதன் தொடர்ச்சியாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது, ஒரு கோடிப் பேருக்கும் மேல் பயனடையும் திட்டமாக அமைந்துவிட்டது. இதனைப் பெறும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பயனைச் சொல்கிறார்கள். அனைத்துக்கும் மேலாக அந்தப் பெண்கள் கையில் பணம் இருக்கிறது. இது தன்னம்பிக்கை உள்ளவர்களாக அவர்களை உயர்த்திவிட்டது. ஒற்றைக் கையெழுத்தில் இதனைச் சாத்தியமாக்கி விட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**இவர்களால் தர முடியாது என்று நினைத்தார்கள். ‘தந்துவிடக் கூடாது’ என்றும் நினைத்தார்கள். தர முடியாத அளவுக்கு நிதி நிலை மையை தரைக்கு இறக்கி விட்டும் சென்றார்கள். இரண்டு ஆண்டு காலம் திட்டமிட்டு, நிதி நிலைமையை ஓரளவு சரி செய்த பிறகு நிறைவேற்றிக் காட்டி விட்டார் முதலமைச்சர் அவர்கள்.**

கடந்த செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் ஒரு கோடியே 6 லட்சம் பேருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். செப்டம்பர் 15, அக்டோபர் 15 - என இரண்டு மாதத்தில் இரண்டாயிரம் ரூபாயை ஒரு கோடியே ஆறு லட்சம் மகளிர் பெற்றுவிட்டார்கள். விதிமுறைப்படி நவம்பர் 15 தான் அடுத்த ஆயிரம் ரூபாயை வழங்கி இருக்க வேண்டும். தீபஒளித் திருநாள் 12 ஆம் தேதி வருவதால், முன்கூட்டியே 1000 ரூபாயைத் தருவதற்கு உத்தரவிட்டார் முதலமைச்சர் அவர்கள். “3000 ரூபாய் இதுவரை மகளிர் பெற்றுவிட்டார்கள். மாதம் தோறும் ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் மகளிருக்கு போய்ச் சேர்கிறது. இதனால் பணப்புழக்கம் அதிகமாகி விட்டது. இந்த திருநாளானது உற்சாகமாகக் கொண்டாடப்பட இதுவும் ஒரு காரணம்” என்று ஊடகங்கள் சொல்லத் தொடங்கி இருக்கின்றன. ஊடகங்களில் பேட்டி கொடுக்கும் மகளிரும் இதையே வழிமொழிகிறார்கள்.

முதலில் தரப்பட்டது, ஒரு கோடியே 6 இலட்சத்து 58 ஆயிரத்து 375 பேர். இரண்டாம் கட்டமாகச் சேர்க்கப்பட்டவர்களையும் சேர்த்தால் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து அறுபதாயிரத்து 89 ஆக உயர்ந்துள்ளது. 11 இலட்சத்து 86 ஆயிரத்து 530 மகளிர் இன்னமும் மேல்முறையீடு செய்துள்ளார்கள். “அவர்களுடைய மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்த விண்ணப்பங்களையும் சரிபார்ப்பு அலுவலர்களைக் கொண்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் தகுதிபெறும் மகளிரும் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக டிசம்பர், 2023 முதல் சேர்க்கப்படுவார்கள்” என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது உருவாக்க இருக்கும் சமூகப் பொருளாதார மாற்றம் என்பது மிகப் பெரியது ஆகும். பெண்களின் சமூகப் பங்களிப்பை அதிகம் ஆக்கும்.

**“இந்தியாவில் தொழிற்சாலைகளில் பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது” என்பதைப் பாராட்டி ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது. ‘தமிழ்நாட்டின் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளே இதற்குக் காரணம்’ என்று பாராட்டியுள்ளது. ‘Roll PKG Where women elevate shop floors’ என்ற தலைப்பில் அந்த நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில், இந்தியாவில் உற்பத்தித் துறையில் பணிபுரியும் பெண்களில் 43 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் உள்ளதாகச் சொல்லி இருக்கிறது.**

**பெண்களின் தைரியமும், அவர்களுக்கு குடும்பத்தினர் அளித்து வரும் ஆதரவும், அதிக அளவில் பெண்கள் வேலைக்குச் செல்ல காரணமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ள அந்த நாளிதழ், தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளில், பெண்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழல் உள்ளது இதற்கு முக்கியக் காரணம் என்றும், இவ்வாறு வேலைவாய்ப்பு பெற்ற பெண்களின் பிள்ளைகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உயர்கல்வி கற்று தற்போது நல்ல நிலையில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டி உள்ளது.**

சென்னை உள்ளிட்ட நகரங்களில் உள்ள உட்கட்டமைப்புகள், பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் விடுதிகள், உயர் கல்விக்கான வசதிகள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் பாலியல் தொல்லைகளை தடுப்பதற்கான ஏற்பாடுகள் பெண்களின் வேலைவாய்ப்புக்கான மையமாக தமிழ்நாட்டை மாற்றி உள்ளதாகவும், இதன் காரணமாக கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அந்த நாளிதழ் பாராட்டியுள்ளது.

**‘சமூக நீதி என்றால் என்ன?’ என்றும், ‘திராவிட மாடல் என்றால் என்ன?’ என்றும் கேட்கும் தற்குறிகளுக்கான பதில்கள்தான் இவை!**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாநகரின் தந்தை ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.11.2023) தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் 77 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலையை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். தூத்துக்குடியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ. லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பி.ஜெகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி. தினேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் ரூ.77.87 இலட்சம் செலவில்

## தூத்துக்குடி மாநகரின் தந்தை குரூஸ் பர்னாந்தீஸ்-க்கு திருவுருவச் சிலை!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 16-**

**தூத்துக்குடி மாநகரின் தந்தை ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் ரூ.77.87 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாநகரின் தந்தை ராவ் பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் பிறந்த நாளான நேற்று (15.11.2023) தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் 77 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலையை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப் படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப் பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி மாநகர மக்களின் நலன் காத்திட தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்கள். ஏறத்தாழ 30 ஆண்டு காலம் நகரமன்ற உறுப்பினராகவும், ஐந்து முறை நகரமன்றத் தலைவராகவும் இருந்த காலத்தில், ஜாதிமத பேதமின்றி அம்மாவட்ட அடித்தள மக்களின் அடிப்படைக் கல்வி மேம்பாடு, குடிசை வீடுகள் மேம்பாடு, தீண்டாமை எதிர்ப்பு, கூட்டுறவு வங்கிக் கடனுதவி, சுகாதார மையங்கள், சனிக்கிழமைச் சந்தை, அங்காடிகள், பொதுவான கல்லறைத் தோட்டம் என நல்லபல திட்டங்களைச் செயல்படுத்தி சாதனை படைத்தவர். குறிப்பாக, 1927ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தில் சிக்கித் தவித்த போது, மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடன், நெல்லை தாமிரபரணி ஆற்றிலிருந்து குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்தி வெற்றி கண்ட அத்திட்டம் அம்மாநகர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

தன்னலமற்ற தனது தியாகத்தினால், அம்மாவட்ட மக்களின் மனங்களில் இன்றும் உயர்ந்து நிற்கும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் நினைவினைப் போற்றிடும் வகையில், அன்னாரின் பிறந்த நாளான நவம்பர் 15 அன்று அரசு விழாவாக கொண்டாடப் பட்டு வருகிறது.

ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு நினைவு மணிமண்டபம் கட்டப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, அன்னாரின் புகழுக்கு மென்மேலும் பெருமைச் சேர்க்கின்ற வகையில் அவருக்கு தூத்துக்குடி மாநகராட்சியில் குவிமாடத்துடன் கூடிய முழு உருவச் சிலை அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் 13.11.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தூத்துக்குடி மாநகர மக்களின் தந்தை என்று அன்போடு அழைக்கப்படும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் பிறந்த நாளான நேற்று தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் 77 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள குவிமாடத்துடன் கூடிய அவரது திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்றக் கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர். எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பி.ஜெகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி.தினேஷ்குமார், துணை மேயர் திருமதி ஜெனிடா, ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் கொள்ளு பேத்தி திருமதி ரமோலா வாஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டிச.17இல் இரண்டாவது இளைஞர் அணி மாநாடு: மாநில உரிமை மீட்போம்!

## கன்னியாகுமரியில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பயணம் !

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

**கன்னியாகுமரி, நவ.16-**

**இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி “மாநில உரிமை மீட்போம்” என்ற தலைப்பில் இருசக்கர வாகனப் பேரணியை கன்னியாகுமரியில், தி.மு.க. இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.**

2வது தி.மு.க. இளைஞர் அணி மாநாடு சேலத்தில் வரும் டிசம்பர் (17ஆம் தேதி) நடைபெற உள்ளது. இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணி கன்னியாகுமரியில் நேற்று தொடங்கி வைக்கப் பட்டது. கன்னியாகுமரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை தொடங்கி வைத்தார்.



அப்போது அவர் பேசியது வருமாறு:-

234 தொகுதிகளிலும் பொதுமக்களைச் சந்தித்து அரசின் சாதனைகளை கூறவேண்டும் மாநில உரிமையை பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின்உரிமையை மீட்டெடுக்க தி.மு.க. அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய தொகையை ஒன்றிய அரசு வழங்க மறுக்கிறது நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கம் வெற்றி பெற்றுள்ளது என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

இருசக்கர வாகன பிரச்சாரப்பேரணியில் 188 இருசக்கர வாகனங்கள் பங்கேற்றுள்ளன. 38 மாவட்டங்களில் 234 சட்டமன்றத் தொகுதிகளில் இருசக்கர வாகன பேரணி பயணித்து வரும் 27ஆம் தேதி முடிவடைகிறது. இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணி செல்லும் மாவட்டங்கள் வள்ளுவர், பெரியார், அண்ணா, கலைஞர் என 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் இருசக்கர வாகன பேரணி தொடக்க நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பேரணி செல்பவர்கள் பொதுமக்களைச் சந்தித்து தமிழ்நாட்டின் வரலாற்றை எடுத்துரைக்கவேண்டும் என்றும், தமிழ்நாட்டின் உரிமையை மீட்டெடுக்க தி.மு.க. அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பட்டியலிடவேண்டும் என வலியுறுத்தினார். மேலும், தி.மு.க. சார்பில் முன்னெடுக்கப்பட்ட நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கம் வெற்றி பெற்றுள்ளதாக கூறினார்.

**சங்கரய்யா மறைவிற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி!**

முன்னதாக, விடுதலைப் போராட்ட வீரர் சங்கரய்யாவின் மறைவிற்கு உதயநிதி ஸ்டாலின் மற்றும் இருசக்கர வாகன பேரணியில் பங்கேற்றவர்கள் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

## தகைசால் தமிழர் – பொதுவுடைமைப் போராளி

# மார்க்சிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யா அவர்களுக்கு "தகைசால் தமிழர்" விருதினை வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, ஊரக தொழிற் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்கள் டி.கே.ரங்கராஜன், ஏ.சௌந்தரராஜன், பொதுத் துறைச் செயலாளர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். (14.8.2021)

**சென்னை, நவ. 16-**

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும் தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருது பெற்றவருமான என்.சங்கரய்யா அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம். அவருக்கு வயது 102.**

**இச்செய்தி அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று என்.சங்கரய்யா அவர்கள் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். தமிழ்நாட்டிற்கு அவர் ஆற்றிய தொண்டினைப் போற்றும் வகையில் என்.சங்கரய்யா அவர்களின் திருவுடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான என்.சங்கரய்யா அவர்கள் சென்னை குரோம்பேட்டை நியூ காலனியில் வசித்து வந்தார். அவருக்கு சளி தொந்தரவு, காய்ச்சல் காரணமாக ஆக்சிஜன் குறைவு ஏற்பட்டதால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவரது உயிர் நேற்று (நவ.15) பிரிந்தது.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று என்.சங்கரய்யா அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அவருடன் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, இ.கருணாநிதி எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### அரசு மரியாதை!

விடுதலைப் போராட்ட வீரராக, சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் கட்சித் தலைவராக அவர் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாக என்.சங்கரய்யா அவர்களின் திருவுடலுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான சங்கரய்யா அவர்களின் மறைவு தமிழ்நாட்டு அரசியலில் பெரும் இழப்பாகும் என்று பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்ததுடன் நேரில் சென்றும் சங்கரய்யா அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### என்.சங்கரய்யா வாழ்க்கை வரலாறு!

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆத்தூரை பூர்வீகமாக கொண்டது தோழர் என்.சங்கரய்யாவின் குடும்பம். நரசிம்மலு – ராமானுஜம் தம்பதியினருக்கு 1921 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் நாள், 2வது மகனாக பிறந்தார் என்.சங்கரய்யா. அவருக்கு முதலில் பிரதாப சந்திரன் என்று பெயர் வைக்கப்பட்டு, பின்னர் அவருடைய பாட்டனாரின் பெயரான சங்கரய்யா என்ற பெயர் சூட்டப்பட்டது.

மதுரை நகராட்சியில் பொறியாளராக பணி கிடைத்ததை ஒட்டி, நரசிம்மலுவின் குடும்பம் மதுரைக்கு இடம் பெயர்ந்தது. புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியிலும் ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியிலும் பள்ளிக் கல்வியை முடித்தார் சங்கரய்யா. 1937ஆம் ஆண்டில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இன்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்தார். மாணவ பருவத்திலேயே இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்திலும், விடுதலை போரிலும் தீரத்துடன் பங்கேற்ற தலைவராக விளங்கினார். அவர் முன்னணியில் நின்று ஒருங்கிணைத்த கூட்டங்களில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். "We are not job hunters; we are freedom hunters" என்ற முழக்கத்துடன் களம் கண்டதை எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்வார் என்.சங்கரய்யா.

நாட்டின் அரசியல் விடுதலையோடு சமுதாய விடுதலையையும் லட்சியமாகக் கொண்டு 1940 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். விடுதலை போராட்டத்தை ஒடுக்க முற்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி நிர்வாகம் மாணவர் சங்கரய்யாவையும் கைது செய்தது. பட்டப்படிப்பின் இறுதித் தேர்வுக்கு 15 நாள்களே இருந்த நிலையில் கைது செய்யப்பட்ட சங்கரய்யா வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். கல்லூரி கல்வி பாதியில் நின்றது. கல்வியா? நாட்டின் விடுதலையா? என்ற கேள்விக்கு நாட்டின் விடுதலையும், பொது வாழ்க்கையும் முக்கியம் என முடிவு செய்தார். நாட்டின் விடுதலை போராட்டத்தை முன்னெடுக்கும் பணியை மேற்கொண்டதுடன் 1942 ஆம் ஆண்டு தனது 21வது வயதில் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய மதுரை மாவட்டச் செயலாளராக திறம்பட செயலாற்றினார்.

1946ஆம் ஆண்டு இந்தியாவை உலுக்கிய கப்பற்படை எழுச்சி பம்பாயில் தொடங்கி கல்கத்தா, சென்னை என்று அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியது. இந்தப் பின்னணியில் தான் கம்யூனிஸ்ட்டுகள் மீது மதுரை சதி வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் மீண்டும் சிறைப் படுத்தப்பட்ட தோழர்கள் என்.சங்கரய்யா, பி.ராமமூர்த்தி, கே.டி.கே. தங்கமணி ஆகிய தலைவர்கள் 1947 ஆகஸ்ட் 14ஆம் தேதி இரவுதான் விடுதலையானார்கள்.

விடுதலைப் போராட்டத்தின் போதும், அதன்பின்னரும் எட்டு ஆண்டுகள் சிறையிலும், நான்கு ஆண்டுகள் தலைமறைவாகவும் இருந்து இயக்கப் பணியாற்றியவர் தோழர் என்.சங்கரய்யா. தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்கி வளர்த்தவர்களில் ஒருவர். ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சிலிலிருந்து வெளிநடப்பு செய்த 32 தலைவர்களில் என்.சங்கரய்யாவும் ஒருவர். 1964 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உருவானபோது அதில் முக்கியப் பங்காற்றிய தலைவராக தோழர் என்.சங்கரய்யா இருந்தார். கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் மற்றும் அகில இந்திய கட்டுப்பாட்டுக் குழு தலைவர் ஆகிய பொறுப்புகளிலும் திறம்பட செயலாற்றினார். 1995 முதல் 2002 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மாநிலக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார்.

### பாட்டாளி வர்க்கத்தின் குரலாக விளங்கினார்!

1967, 1977 மற்றும் 1980 தேர்தல்களில் போட்டியிட்டு மதுரை மேற்கு மற்றும் மதுரை கிழக்கு தொகுதிகளிலிருந்து சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆட்சி மொழியாக தமிழே விளங்க வேண்டும் என்று கர்ஜித்த சிம்மக்குரல் அவருடையது. பேரவையில் பாட்டாளி வர்க்கத்தின் குரலாக விளங்கினார். ஏகாதிபத்திய எதிர்ப்பு, மக்கள் ஜனநாயகப் புரட்சி என்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) திட்டத்தின் அம்சங்களை பின்பற்றுவதில் உறுதியாக நின்றவர். அவருடைய உரைகளில் உழைக்கும் வர்க்கத்தின் கருத்துக்களை எளிமையாகவும், வலிமையாகவும் வெளிப்படுத்திய ஆற்றல்மிக்க பேச்சாளர்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தை வளர்த்தெடுத்த தலைவர்களில் ஒருவரான என்.சங்கரய்யா, அகில இந்திய பொதுச் செயலாளர் மற்றும் அகில இந்திய தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் நெடுங்காலம் பணியாற்றியவர்.

தீக்கதிர் நாளேடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அதிகாரப்பூர்வ ஏடாக அறிவிக்கப்பட்டு வெளிவந்த போது, முதல் ஆசிரியராக பணியாற்றியவர். சாதிய வன்முறை மற்றும் வகுப்புவாத அபாயம் தலைதூக்கிய நேரங்களில் அதற்கு எதிராக மக்களை ஒற்றுமைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

சொந்த வாழ்க்கையில் கம்யூனிஸ்ட் நெறிமுறைகளை இறுதி வரையிலும் கடைப்பிடித்தவர் தோழர் என்.சங்கரய்யா. கட்சிக் குடும்பத்தைச் சேர்ந்த நவமணியுடனான அவரது திருமணம் சாதி மத மறுப்பு காதல் திருமணமாகும். இந்தத் தம்பதியருக்கு சந்திரசேகர், நரசிம்மன் என்ற மகன்களும், சித்ரா என்ற மகளும் உள்ளனர். தன்னுடைய குடும்பத்தில் அனைவரும் சாதிமத மறுப்பு திருமணம் செய்துகொள்ள காரணமாக அமைந்தவர்.

### "உழைக்கும் மக்களின் தோழர்" சங்கரய்யா!

70 ஆண்டுகளுக்கும் மேலாக பொது வாழ்வில் மாணவராக, கட்சித்தலைவராக, சட்டப்பேரவை உறுப்பினராக, விவசாய சங்க மாநில, அகில இந்தியத் தலைவராக பல சேவைகளையாற்றியவருமவரும், சுதந்திரப் போராட்ட வீரர், 'உழைக்கும் மக்களின் தோழர்' எனப் போற்றப்படும் என்.சங்கரய்யா அவர்கள் நேற்று (15.11.2023) காலை சிகிச்சை பலனின்றி மறைவுற்றார்.

### தகைசால் தமிழர் விருது முதல்வர் வழங்கி கௌரவித்தார்!

தமிழ்நாட்டில் 2021ல் தி.மு.க. அரசு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்ததும் தமிழ்நாட்டுக்கும் தமிழினத்துக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை சிறப்பிக்க 'தகைசால் தமிழர் விருது' உருவாக்கப்பட்டது.

இந்த தகைசால் தமிழர் விருது முதன் முதலாக முதுபெரும் இடதுசாரித் தலைவர் என். சங்கரய்யா அவர்களுக்கு வழங்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 ஆம் ஆண்டு அறிவித்தார்.

அதோடுமட்டுமல்ல இந்த தகைசால் தமிழர் விருதை சங்கரய்யா அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வழங்கினார்.

அப்போது விருதுக்கான ரூ.10 லட்சம் காசோலையும் சங்கரய்யா அவர்களிடம் முதல்வர் அவர்கள் வழங்கினார்.

ஆனால் விருதாக தாம் பெற்ற ரூ.10 லட்சம் காசோலையை தமிழ்நாடு அரசின் கொரோனா நிவாரண நிதிக்கே திரும்பி வழங்கி 'தகைசால் தமிழர்' என்ற விருதுக்கும் பெருமைச் சேர்த்தார் தியாகி சங்கரய்யா அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரசு மரியாதையுடன் அடக்கம்!

மறைந்த சங்கரய்யாவின் உடல் நேற்று காலை குரோம்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாலை தியாகராயர் நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இன்று (16.11.2023) காலை 10.00 மணியளவில் அவரது உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

---

### பருவமழை தீவிரம்

# மின்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு!




சென்னை, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (15.11.2023) நிதி,மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாட்டில் வட கிழக்கு பருவ மழை காரணமாக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நாட்களில் கனமழை பெய்யும் கடலோர மாவட்டங்களிலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் மின்துறை, சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து, தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, இயக்குனர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன், மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*சென்னை,நவ.16-*

*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில் மின்சாரத துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்*

*வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை மற்றும் மிக கனமழை ஏற்பட கூடுமென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில் மின்சாரத் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு காணொலி காட்சி வாயிலாக நேற்று (15.11.2023) ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ்ணு மஹாஜன், இயக்குநர்கள், அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.*

*இந்த ஆய்வுக் கூட்டத்தில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள 9 மாவட்டங்களின் தலைமைப் பொறியாளர்களுடனும் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடனும், பொதுமக்களுக்கு தடையில்லா சீரான மின் விநியோகம் வழங்க எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை அமைச்சர் மேற்கொண்டார். மேலும், கனமழை பெய்து வரும் கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் மின் கட்டமைப்பில் ஏற்படும் சேதாரங்களை பொறுத்து, சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்கள், தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தளவாடப் பொருட்களுடன் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் அமைச்சர் அறிவுறுத்தினார். மேலும், சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும் செயல்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார்.*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, அமைச்சர் தலைமையில் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மின் சார வாரியம் சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கடந்த 04.11.2023 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அனைத்தினையும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுக்கும் அமைச்சர் உத்தரவிட்டார்.*

**தடையில்லா – சீரான மின்சாரம்!**

*வடகிழக்குப் பருவமழையின் காரணமாக இது வரை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சேதமடைந்த 169 மின் கம்பங்கள் மற்றும் 72 மின் மாற்றிகள் உள்ளிட்ட அனைத்து சேதங்களும் துரித முறையில் சரி செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் தடையில்லா, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

*மிக கனமழை காரணமாக ஏற்படும் மின் சேதாரங்களை போர்கால அடிப்படையில் துரிதமாக சரி செய்வதற்காகவும், சீரமைப்பு பணிகளை விரைந்து முடித்து தடையில்லா சீரான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 44 மின்பகிர்மான வட்டங்களுக்கும், வட்டத்திற்கு 10 இலட்சம் வீதம் மொத்தமாக 4.4 கோடி நிதியினை உடனடியாக வழங்கிட அமைச்சர் உத்தரவிட்டார்.*

*பின்னர், அமைச்சர் மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் (SLDC) மற்றும் சென்னை மின் பகிர்மான கட்டுப்பாட்டு மையம்(SCADA) ஆகியவற்றில் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வரும் சீரான மின் விநியோகம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.*

*பொதுமக்கள் மின்தடை சம்பந்தமான புகார்களை 24X7 மணி நேரமும் செயல்படும் மின் நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தின் 94987 94987 என்ற அலைபேசி எண்ணின் வாயிலாகவும் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மின் தடை நீக்கம் மையம் வழியாகவும் தெரிவிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மழைக் காலங்களில் பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாளுமாறும், அறுந்து கிடக்கும் மின் கம்பிகளின் அருகில் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.*



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வேளச்சேரி பிரதான சாலையில் 177வது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.22 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிழற்குடைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.11.2023) பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கல்விக் குழுத் தலைவர் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள், வே.ஆனந்தம், எஸ்.பாஸ்கரன், பெ.மணிமாறன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னையில் மழை நீர் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த

# பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்தி சீர்படுத்திடுக!

### ஒன்றிய நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, நவ.16-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அவர்களுக்கு சென்னையில் மழை நீர் வெள்ளத்தை கட்டுப்படுத்த பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்தி சீரமைக்க ஒன்றிய நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்கக் கூறி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது :

இயற்கை அன்னையின் தீவிர எச்சரிக்கையாக கடந்த சில ஆண்டுகளாக சென்னை நகரம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் பற்றாக்குறைக்கும் வெள்ளத்திற்கும் இடையே சென்னை அடிக்கடி சிக்கித் தவித்து வருகிறது. மத்திய சென்னையில் ஓடும் கூவம் ஆறும் தென் சென்னையில் ஓடும் அடையாரும் வடசென்னையில் ஓடும் கொசஸ்தலை ஆறும் பக்கிங்ஹாம் கால்வாயால் வடக்கு தெற்கு ஆக இணைக்கப்பட்டுள்ளது இதனால் இயற்கையான நீர் அமைப்பை இந்த நகரம் பெற்றுள்ளது. இதனால் 75 ஏரிகள் மற்றும் 450 குளங்களுடன் கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் இணைக்கப்பட்டுள்ளன. இது ஒரு சிறப்பான நகர அமைப்பாக அமைந்தாலும், திட்டமிடப்படாத நகர வளர்ச்சியால், பெரிய தொழில் துறை வீடுகள் ஈரநிலங்களை அத்துமீறிக் ஆக்கிரமைத்து கொண்டிருக்கும் போது, பெரும்பாலான பெரிய உள் கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் குடியிருப்பு கோபுரங்களால் இந்த நீர் நிலைகள் மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்படாத மற்றும் சட்டவிரோத கட்டுமானம் பருவமழையின் போது மோசமான வடிகால்களை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நீர்நிலைகளின் பெல்ட்களில் வசிக்கும் நகர்ப்புற ஏழைகள் பெரிதும் பாதிப்பிற்கு ஆளாக்கப்படுகின்றனர்

நகரத்தில் உள்ள இயற்கை நீர்நிலைகள் வறண்டு வரும் நிலையில், அரசாங்கம் கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தை செயல்படுத்துகிறது, இது ஒரு விலையுயர்ந்த திட்டமாகும் என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டும். தூர்வாரப்பட்ட கால்வாய்கள் இன்று மாசடைந்து, அதிகளவில் வண்டல் மண் படிந்துள்ளதால், ஒவ்வொரு மழைக்காலத்திலும் நகருக்கு வரும் அதிகப்படியான மழைநீரைத் தேக்கி எடுத்துச் செல்லும் திறனற்று உள்ளது.

**நீர் திறப்பு பணிகள்!**

கடந்த இருபதாண்டுகளாக மிகவும் புறக்கணிக்கப்பட்ட வடசென்னை தொகுதி, நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அரசு அமைந்த பிறகு, , சிறப்பு முயற்சி திட்டங்களின் மூலம் வடசென்னையின் வளர்ச்சிக்கு ரூ .1000 கோடி ஒதுக்கி வரலாற்று நிகழ்வை ஏற்படுத்தி உள்ளது. வடசென்னைப் பகுதியில் வெள்ளப்பெருக்கைத் தடுக்க தமிழ்நாடு அரசும், சென்னை புறநகர் மாநகராட்சியும் புயல் வடிவால் மற்றும் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளை செய்து வருகின்றன "மேலும் எண்ணூரில் கொசஸ்தலையாறு மற்றும் சேப்பாக்கத்தில் கூவம் ஆற்று முகத்துவாரத்தின் நிலையான நீர் திறப்பு பணிகள் ரூ.226.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு வடசென்னை வெள்ள அபாயத்தைப் பெருமளவு குறைக்கும். என்று எதிர் பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு துணைபுரியும் வகையில், தொடர் கள ஆய்வுகள், பங்குதாரர்களின் ஆலோசனைகள், துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. கலந்துரையாடலின் அடிப்படையில் பின்வரும் பொருத்தமான செயல்முறைகள் பரிசீலனைக்காக முதலமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

சென்னை புறநகர் மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளின் தொகுப்பானது வடசென்னை தொகுதியில் உள்ள கொசஸ்தலையாறு மற்றும் கூவம் படுகையின் மேல் பகுதிக்கு நிவாரணம் அளிக்கும். மேல் நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதை ஒட்டிய தாழ்வான பகுதிக்கு இந்த விரைவான வெள்ளப் பாய்ச்சலைக் கையாள்வது எதிர்காலத்தில் எழும் சவாலாக இருக்கும். தணிகாசலம் வாய்க்கால், கொடுங்கையூர் வாய்க்கால், கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்ற அனைத்து வடசென்னை வடிகால்களும் பக்கிங்ஹாம் கால்வாயில் வடிந்து எண்ணூர் மற்றும் கூவம் கடல் முகத்துவாரம் வழியாக கடலுக்குச் செல்ல வேண்டும் என்பதே இதற்கு முக்கியக் காரணம். மழைநீரை மழைநீர் வடிகால் மற்றும் மேக்ரோ வடிகால் மூலம் விரைவாக அகற்றுவது, ரீசார்ஜ் குறைவதற்கும், நிலத்தடி நீர் குறைவதற்கும் மற்றும் வறட்சி காலங்களில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும்.

இத்தருணத்தில், நகரமயமாக்கல் மற்றும் மேல் நீர்ப்பிடிப்பு பகுதியில் புயல் வடிகால் வலையமைப்புகளின் நவீனமயமாக்கல் காரணமாக பக்கிங்ஹாம் கால்வாயில் நுழையும் திடீர் வெள்ளத்தைக் கையாள; பக்கிங்ஹாம் கால்வாயை மற்றும் கரையோரப் பகுதிகளை ஒட்டியுள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்க, போர்க்கால அடிப்படையில் பக்கிங்ஹாம் கால்வாயை நவீனப்படுத்துவது மிகவும் அவசியமானது மற்றும் அதி முக்கியமானதுமாகும். சென்னை நதி மறுசீரமைப்பு அறக்கட்டளையுடன் நீர்வளத் துறையும் சேர்ந்து, சென்னை நகரப் பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயை முழுவதையும் ஒரு விரிவான மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்கி வருகிறது, இதில் வடசென்னை திட்டத்தின் கீழ் வடசென்னையின் அதிக மக்கள் அடர்த்தி, நிலப்பரப்பு வரம்புகள் மற்றும் கருத்தில் கொண்டு முதன்மையாக செயல்படுத்தப்பட வேண்டும். கலந்துரையாடல் மற்றும் கள ஆய்வின் போது, நீர்வளத்துறை இன்ஜினியர்கள் முதல் கட்ட மறுசீரமைப்பு பின்வரும் கூறுகளை உள்ளடக்கியதாக வடக்கு பி' கால்வாய்க்கு ரூ. 68.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சங்கிலி இணைப்பு வேலி!**

கடல் மட்டத்திலிருந்து 1மீட்டர் வரை அமைந்துள்ள பகுதியில் சேறு மற்றும் குப்பைகளை அகற்றுதல் திடக்கழிவுகளை அகற்றுதல், சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயை குப்பைத் தொட்டியை வைப்பது பாதிக்கப்படக்கூடிய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் தடுப்பு சுவர் அமைப்பது போன்ற திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

நீர்வளத்துறை பக்கிங்ஹாம் கால்வாயை புனரமைக்க ரூ 1032 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்டத்தை வழங்கியுள்ளது இதில் திட்டத்தினால் பாதிக்கப்படும் 4453 குடும்பங்களுக்கு மறு குடி அமர்வு செய்வதற்கான திட்டத்தை உள்ளடக்கி உள்ளது இதனை செயல்படுத்த அதிக நேரம் எடுக்கும். எனவே சிஆர்ஆர்டி நிதியுதவியின் கீழ் வெள்ளம் தாங்கும் திறனை அதிகரிப்பதற்காக ரூ.68.17 கோடி செலவில் (கட்டம்1) முதன்மையான பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பக்கிங்ஹாம் கால்வாயை zero படுக்கை சாய்வு கால்வாயாக இருப்பதால், வடசென்னையின் பக்கிங்ஹாம் கால்வாயை மற்றும் கடலோரப் பகுதியில் உள்ள நகர்ப்புற வெள்ளத்தைத் தவிர்க்க உடனடியாக அகற்றப்பட வேண்டிய சேறு, வண்டல் மற்றும் குப்பைகள் அகற்றபடாததின் காரணமாக அதன் வெள்ளம் தாங்கும் திறன் குறைவாக உள்ளது. பக்கிங்ஹாம் கால்வாயை இருந்து கடலுக்கு நேராக நான்கு வெள்ள கேரியர்களை வழங்குவதன் மூலம் நீண்ட கால வெள்ள நிவாரணத்திற்கான நீர்வளத்துறை முன்மொழிவை விரைவுபடுத்த வேண்டும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இது சம்பந்தமாகத் தேவையானதைச் செய்து, பக்கிங்ஹாம் கால்வாயில் உடனடியாக வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த வெள்ளம் மற்றும் வறட்சியை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு தக்க ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் குறிப்பாக வடசென்னை பகுதிகளில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த சென்னை நகரத்திற்கான மேலாண்மை திட்டத்தை வலியுறுத்துகிறேன். தங்களின் நேர்மறையான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

## புதுக்கோட்டை மாவட்டம்

# கறம்பக்குடி அரசு மருத்துவமனையில் ஆய்வு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

புதுக்கோட்டை,நவ.16-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.11.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, மருத்துவத்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கறம்பக்குடி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கறம்பக்குடி அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்து 36 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனையாக கடந்த 2015ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் 3 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 3 மருத்துவர்கள் பணியில் உள்ள நிலையில் ஒரு மருத்துவர் கூடுதலாக மாற்றுப் பணியில் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 5 செவிலியர் பணியிடங்கள் உள்ள நிலையில் ஒரு தலைமை செவிலியர் பணியிடம் காலியாக உள்ளது. நாள்தோறும் சராசரியாக 450 புறநோயாளிகளும், 14 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு பணிநிலையில் உள்ள மருத்துவர்களுடன் மற்ற மருத்துவமனைகளில் இருந்து மேலும் 02 மருத்துவர்கள் மாற்றுப் பணியில் பணியமர்த்தப்பட்டு 06 மருத்துவர்களுடன் 24 மணி நேரமும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இம்மருத்துவமனையில் படுக்கைவசதியுடன் கூடுதல் கட்டடம் வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாயும், மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 2 கோடி ரூபாயும் பெறப்பட்டு 50 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடப்பிரிவு ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் மருத்துவர்கள், பணியாளர்களின் காலிபணியிடங்களை நிரப்புவதற்கும், அவர்களுக்கான தங்குமிடம் கட்டுவதற்கும் நிதிநிலை அறிக்கையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பிணவறை கட்டுவதற்கான இடத்தினை தயார் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய நுண்கதிர் கருவி, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் கருவி, சிடி ஸ்கேன் கருவி tnmsc மூலம் பெற்று வழங்கப்படும். மேலும் நிரந்தரப்பணியிடங்கள் 3 மாத காலத்திற்குள் தோற்றுவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்படும்.

இதன்மூலம் இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் மரு. சண்முககனி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மாலா ராஜேந்திரதுரை, கறம்பக்குடி பேரூராட்சித்தலைவர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முழுவதும் நவ.18 -19 நடக்கவிருந்த

# வாக்காளர் சிறப்பு முகாம் தேதி மாற்றம்!

### சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,நவ.16-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, தமிழ்நாடு முழுவதும் வரும் நவம்பர் 18 மற்றும் 19ஆம் தேதிகளில் நடக்கவிருந்த வாக்காளர் சிறப்பு முகாம் வேறு தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியானது அக்டோபர் 27ஆம் தேதி தொடங்கப்பட்டு, டிசம்பர் மாதம் 9ஆம் தேதி வரை நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்றம் செய்ய 04.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் தீபாவளியை முன்னிட்டு, 13.11.2023 அன்று தமிழ்நாடு அரசு பொது விடுமுறையாகவும், அதற்கு பதிலாக வரும் 18.11.2023 அன்று பணி நாளாகவும் அறிவித்தது. இதனால் வரும் 18.11.2023 மற்றும் 19.11.2023 ஆகிய நாட்களில் நடக்கவிருந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் 25.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை!

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - பெ.ராமலிங்கம் - கே.பொன்னுசாமி முன்னிலை!

நாமக்கல், நவ. 16-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் நாமக்கல நளா ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் வரவேற்றார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கூட்டத்தை துவக்கி வைத்து பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசும் போது, வரும் 18ஆம் தேதி நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும். ஒரு பூத்துக்கு 5 பேர் முதல் 10 பேர் வரை இளைஞர்களை நிகழ்ச்சிக்கு அழைத்து வர வேண்டும், அவர்களுக்கு வெள்ளை சீருடை வழங்கப்பட உள்ளது.

இளைஞர் அணி செயலாளர் முயற்சியால் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போதமலைக்கு சாலை வசதியும், நாமக்கல் பகுதிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கும் வழிவகை செய்து அந்த திட்டப்பணிகள் நடந்து வருகிறது.இதுவரை எந்த கட்சியும் செய்ய முடியாத இமாலய சாதனையையும், வரலாற்றுச் சாதனையையும் தி.மு.க. அரசு செய்துள்ளது.

எனவே சிறப்பாக நடத்திட வேண்டும் ஏனென்றால் இன்னொரு தேதி நமக்கு அரசாங்கத் திட்டங்களை முதலமைச்சர் திறந்து வைக்கின்ற தொடங்கி வைக்கின்ற அரசு திட்டங்கள் பல திட்டங்கள் நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி முடித்து விடுங்கள் என்று அவர் ஆணையிட்டதன் காரணமாக நாம் இந்த விரைவாக இந்த நிகழ்ச் சியை நடத்த வேண்டிய பொறுப்பு நமக்கு வந்திருக்கிறது .

அதேபோல் நீண்ட காலமாகவே நாமக்கல் புறவழிச் சாலைக்கு நிலம் கையகப்படுத்துவதில் பிரச்சனை இருந்து வந்தது அதையெல்லாம் போக்கி இப்பொழுது பணிகள் துவங்கக்கூடிய நிலையில் உள்ளது. நாமக்கல் புறவழிச் சாலைக்கு 190 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கு ஆணை வழங்க பெரிதும் காரணமாக இருந்தவர் நம்முடைய இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கு சிறப்பாக வரவேற்பு அளிக்க வேண்டும்.

மேலும் நாமக்கல் சேந்தமங்கலம், எருமப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகள் பயன் அடையும் வகையில் ரூ. 750 கோடி மதிப்பிலான புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறப்பட்டு, அனைத்துக் கிராம மக்களும் பயனடையும் வகையில் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகிறது காரணம் எருமப்பட்டி போன்ற ஒன்றி யங்களில் நிலத்தடி நீர் மிகவும் உப்பு அடைந்ததாக காணப்படுவதினால் அதனை குடிக்கும் நபர்களுக்கு 40 வயதிலேயே சிறுநீர் பாதிப்பு உள்ளிட்ட நோய்கள் ஏற்பட்டு மிகப்பெரிய மருத்துவம் பார்க்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இதனை கருத்தில் கொண்டு அவர்களுக்கும் காவிரி நீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

கூட்டத்தில் மாவட்டத் துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பவுத்திரம் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் சுசிதரன், பூவராகவன், சரவணன், கண்ணன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மாநில செயலக அணி துணை செயலாளர் முத்துவேல்,

நகர செயலாளர்கள் ராணாஆனந்த் சிவகுமார், பூபதி, என்ஆர்.சங்கர், இராமசுவாமி, ஒன்றிய செயலாளர்கள் பழனிவேல் ஜெகநாதன் நவலடி கௌதம் பால சுப்பிரமணியம் துரைசாமி செந்தில்முருகன், ஜெயப்பிரகாஷ், பேரூர் கழக செயலாளர் பொன்.நல்லதம்பி, சுப்பிரமணியன், முருகேசன், , ஜெயக்குமார், அன்பழகன், ராஜேஷ், கண்ணன், செல்லவேல் தனபால், பழனியாண்டி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பொன்.சித்தார்த் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட பொருளாளர் ஏ.கே. பாலச்சந்திரன் நன்றி கூறினார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (15.11.2023) உடல்நலக் குறைவால் காலமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என். சங்கரய்யா அவர்களின், சென்னை குரோம்பேட்டை இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

## நே.சிற்றரசு தலைமை! தயாநிதிமாறன் எம்.பி. - அன்பகம் கலை - டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# சென்னை மேற்கு மாவட்டப் பிரதிநிதி பூ.கா.சாமிவேல் இல்ல மண விழா வரவேற்பு!

### அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாழ்த்துரை!

சென்னை , நவ. 16 -

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, மாவட்டப் பிரதிநிதி பூ.கா.சாமிவேல் - எஸ். மகேஸ்வரி ஆகியோரின் புதல்வி எஸ்.காவிய லஷ்மிக்கும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி டவுன், பெரியார் நகர் டி.சதீஷ் - அஸ்வினி இவர்களின் தம்பி டி. சரத்குமாருக்கும் மணவிழா வரவேற்பு இன்று (16.11.2023 - வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில் மயிலாப்பூர், லஸ், காட்டுக்கோயில் சர்ச், பிரகாச மாதா கம்யூனிட்டி ஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், ஜெ.நற்குணநாதன், துபாய் வி.ஆர்.விஜய், வி.எஸ்.கலை, யு.மல்லிகா யுவராஜ், பி. கே.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.டி.பாபு, இ.ஏழுமலை, அசோக், கே.வேல்முருகன், ஜெ.எம்.மணிவண்ணன், நே.திருமாறன், ஜெ.சரளாகுமாரி, முகமது அப்சல். பி.சத்திய நாராயணன், சி.மூர்த்தி, சூரியன், கே.பிரபு, போட்டோ கே. செல்வம், சூரியன் கே.சிவா, பி.பி.பரிமளம், இ.ஜான், ஏ. ஜெயகாந்த், ஆர்.முரளி, ஜி. லஷ்மணன், என்.ஜி.குமார், எஸ்.பிரேம்குமார், ஏ.லஷ்மணன், என்.ஜி.குமார், எஸ். பிரேம்குமார், ஏ.கிருஷ்ணமூர்த்தி, டிங்கர் டி.வேலு, எம்.வாசு, ஆனந்த் ஜெயின், குட்டி (எ) குணசேகர், எஸ்.ஜெயலஷ்மி, ஏ.முருகேசன், பி.ராஜு, டி.பாஸ்கர், என்.புருசோத்தமன், எம்.சரவணன், தாம்பரம் பிரபா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., கு.க.செல்வம், நுங்கை வி.எஸ்.ராஜ், ஜெ. கென்னடி, கே.ஜே.சரவணன், கலை கதிரவன், மன்சூர் அலி கான், வி.பி.மணி, எம்.டி.ஆர். நாதன், பா.இராபட், வெற்றி செல்வி, வி.என்.ராஜன், எஸ். எம்.கே.அண்ணாதுரை, துபாய் வி.ராஜேந்திரன், வ. கணேசன், எம்.எஸ்.காமராஜ், எஸ்.என்.கோபிராஜன், ஆர். வி.கிரிஸ்டி, எம்.சரவணன், டி.ஜி.மணி, துவிக்டர், ஆர். என்.துரை, ஜெ.எஸ்.அக்ஸ்டின்பாபு, ஏ.சங்கீதா,

ந.இராமலிங்கம், ஏ.ஆர்.பி. எம்.காமராஜ், எஸ்.மதன்மோகன், ச.பரமசிவம், கே.ஏழுமலை, நந்தனம் மதி, பா.பிரகாஷ், ச.அசோக் குமார், எஸ்.யோகேஸ்வரி, டாக்டர் ஜவீகன் அய்யநாதன், டி.எஸ்.ராஜா, வழக்கறிஞர் தேவேந்திரன், டி.கே. லதாபிளாரண்ஸ், கு.பிச்சையம்மாள், சுலோக்சனா ராமு, பி.சீனிவாசன், எம்.டி.ஆர். சாரதி, எம்.கே.ஆனந்த், சி. கே.ரெங்கராஜ், ரகமத்துல்லா, இளம்பாரதி, ராஜராஜன், ஏ. விஜயராஜ், அரவிந்த் குமார், ஜெ.எம்.எச்.இம்ரான், எம். மோகனவேல், யூ.பிரவீன்ராஜ், எஸ்.சரண்,

எம்.ஆர்.ஐம்புலிங்கம், கோ.ரவி, மு.வெங்கடேசன், மா.ஜெயக்குமார், டி.வைலட் மேரி, புவி பாலாஜி, என்.பி. இதாயத்பாஷா, ஸ்டெர்லிங் கமலகண்ணன், பி.பொன்னம்மாள்,

கோ.யுவராஜ், எஸ்.என். கே.ராமன், ஆர்.பாபு, எப்.பீட்டர்ஜான், எஸ்.சத்தியபெருமாள், டி.தேவராஜ், எல்.தவமணி, நுங்கை ப.மகேஷ், என். எம்.விஷ்ணு, வரதை த.பரி, த.குணசேகர், க.சிட்டிபாபு, கே.எஸ்.தினேஷ் பாபு, டேவிட் இன்பராஜ், மு. மோகன், ஐ.ஓ.பி. ராஜேந்திரன், டி.ராஜவேலு, மு.இ.ஏழுமலை, சீ.கிருஷ்ணமூர்த்தி,

பிரேமா சுரேஷ் எம்.சி., பி.திருமலை பொன்னுரங்கம் எம்.சி., எம்.ஏ.நந்தினி எம்.சி., எலிசபெத் அக்ஸ்டின் பாபு எம்.சி.,

ஜெ.சிவலிங்கம், ஜெ.வரதராஜன், ஏ.பி.ராமநாதன், கி.ஜான்டிசில்வா, ஏ.கண்ணன், எஸ்.குணசேகரன், சி. பாட்ஷா (பாபு), கே.பி. வினோத், நுங்கை பி.ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்ற னர்.

எம்.பாஸ்கர், ஜெ.கே. குமார், டைல்ஸ் கண்ணன், பி.கமலகண்ணன், பி.முருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## இந்தப் பிரச்சாரப் பயணம் மிகப் பெரிய வெற்றிப் பயணமாக அமைய வாழ்த்துகிறேன்!

# சேலம் மாநாடு - வரலாறு பேசும் மாநாடாக அமையும்!

## குமரியில் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியைத் தொடங்கிவைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

கன்னியாகுமரி, நவ. 16 -

**தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டையொட்டி தமிழ்நாடு முழுவதும் பயணிக்கும் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்து கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, 'இந்தப் பயணம் மிகப் பெரிய வெற்றிப் பயணமாக அமையட்டும்" என்று வாழ்த்தினார்.**

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டையொட்டி, தமிழ்நாடு முழுவதும் பயணிக்கும் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியை, தி.மு.க இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரியில் நேற்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டிற்குப் பொதுமக்களை எல்லாம் அழைக்கின்ற வகையில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் இரு சக்கர வாகன பிரச்சாரப் பயணம் மேற்கொள்கின்ற, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்திருக்கக்கூடிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அருமைச் சகோதரர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### அமைச்சர் அன்பில் மகேஷ்க்கு பாராட்டு!

இங்கே கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் மகேஷ் அவர்கள் சொன்னதைப் போல் நேற்று நள்ளிரவு 12 மணியளவில், இங்கு வந்து இந்த நிகழ்ச்சி எவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பார்வையிட்டு, இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று, கடந்த 20 நாட்களாக உழைத்துக் கொண்டிருக்கக் கூடிய அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் இளைஞர் அணியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனென்றால், இப்போது மாவட்டச் செயலாளராக இருந்தாலும், அவர் இளைஞர் அணியில் இருந்து வந்தவர் தான். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய நற்பணி மன்றம் உருவாவதற்கு மிக முக்கியக் காரணமாக இருந்து, அதில் இன்றளவும் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர், தன் உழைப்பைக் கொடுத்துக் கொண்டிருப்பவர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி. அவருக்கு என் வாழ்த்துகள்.

### போருக்குத் தயாராகும் போர் வீரர்கள் போல் காட்சி!

நாம் இங்கே இரண்டாவது மாநில மாநாட்டிற்குக் கூடி உள்ளோம். இந்த மாநில மாநாட்டிற்குப் பெயரே `மாநில உரிமைகள் மீட்பு மாநாடு' என்பதை நீங்கள் உணர வேண்டும். மாநில அரசின் உரிமைகளை ஒவ்வொன்றாக ஒன்றிய அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டும், இதற்கெல்லாம் குரல் கொடுக்க வேண்டும் என்றுதான் நம்முடைய மாநில மாநாட்டை, சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடத்த இருக்கின்றோம்.

நான் தமிழ்நாடு முழுவதற்கும் கிட்டத்தட்ட இதுவரை 40 கழக மாவட்டங்களில் செயல்வீரர்கள் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன். செயல் வீரர்கள் கூட்டத்தில் கழகத்தின் நிர்வாகிகள், இளைஞர் அணி உறுப்பினர்கள், நிர்வாகிகள் எல்லாம் கலந்துகொண்டு அவர்களை எல்லாம் மாநாட்டிற்கு அழைக்கின்ற அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகின்றேன்.

அங்கு நடந்தது எல்லாம் செயல்வீரர் கூட்டம் என்றால், இங்கு உங்களை எல்லாம் பார்க்கும்போது, கம்பீரமாக இந்த மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு கருப்பு சிவப்பு டீசர்ட் போட்டுக் கொண்டு கிட்டத்தட்ட போருக்கு தயாராகின்ற போர் வீரர்கள் போல காட்சி அளிக்கின்றீர்கள். உங்களை எல்லாம் நான் வாழ்த்துகின்றேன்.

மாநாட்டுக்காக நான் நிர்வாகிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றேன். இளைஞர் அணி உறுப்பினர்களைச் சந்தித்து கொண்டிருக்கின்றேன். ஆனால், நீங்கள் அடுத்த 10, 15 நாட்களில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரையும் சந்திக்கப் போகின்றீர்கள். தி.மு.க.வின் வரலாற்றைப் பற்றிச் சொல்லப் போகின்றீர்கள். நாங்களெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று ஆயிரக்கணக்கான போர்களைச் சென்று அழைக்கின்றோம். நீங்கள் லட்சக்கணக்கான பேர்களை சந்திக்கப் போகிறீர்கள்.

### இதுவரை 9 லட்சம் பேர் கையெழுத்து!

இந்த ஒன்பது வருடத்தில், ஒன்றிய அரசு நம்முடைய தமிழ்நாட்டு மாநிலத்திற்கு என்னென்ன இன்னல்களை எல்லாம் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது. என்னவெல்லாம் இடையூறுகளைக் கொடுத்திருக்கிறது என்று மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும். நம்முடைய மாநாட்டிற்குப் பெயரே, `மாநில உரிமைகள் மீட்பு மாநாடு' என்னென்ன உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்பதை நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

கல்வி உரிமை பறிக்கப்பட்டு உள்ளது. முக்கியமாக நீட் தேர்வு திணிப்பு.



அந்த விளக்கமும் உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும் Banneet.in என்ற இணையதளத்துக்குச் சென்று பொதுமக்களிடம் இந்த நீட் தேர்வினால் வரக்கூடிய தீமைகளை மக்களிடம் நீங்கள் கொண்டு சேர்க்கவேண்டும். 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற போகின்றோம், என்ற அந்த இலக்கு. இணையதளத்தில் இதுவரை 9 லட்சம் பேர்கள் கையெழுத்திட்டு இருக்கிறார்கள்.

போஸ்ட் கார்டு மூலமாக இதுவரை 10 லட்சம் பேர் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இந்த ஒரு மாதத்தில் இந்த 50 லட்சத்தைத் தாண்டி, இந்தக் கையெழுத்து இயக்கத்தை நீங்கள் வெற்றிகரமாகச் சென்றடையச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

### மாநில உரிமை பறிப்பு!

அதேபோல் நிதி உரிமை, இதுவரைக்கும் 9 வருடத்தில் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கொடுத்திருக்கக் கூடிய வரி ரூ.25 ஆயிரம் கோடி. ஆனால், ஒன்றிய அரசு நமது தமிழ்நாட்டிற்குத் திருப்பிக் கொடுத்தது வெறும் ரூ.2,000 கோடி. நாம் கொடுத்தது ரூ.25 ஆயிரம் கோடி, திரும்ப வந்தது ரூ.2,000 கோடி. இப்படி மாநில உரிமை ஒவ்வொன்றையும் நம்முடைய ஒன்றிய அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மீட்கத்தான் நம்முடைய மாநாடு.

### பயணம் சிறப்பாக அமையும்!

மதுரையில் இரண்டு மாதத்துக்கு முன்பு ஒரு மாநாடு நடந்தது, உங்களுக்குத் தெரியும். எவ்வளவு கேலிக்கூத்தான மாநாடு. ஒரு மாநாடு எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டாக அந்த மாநாடு நடந்தது. ஆனால், நம்முடைய இளைஞர் அணி மாநாடு, இவ்வளவு சிறப்பான எழுச்சியான மாநாட்டை இதுவரை வரலாற்றி லேயே பார்த்ததே இல்லை என்கிற பெருமையைத் தேடித் தரும்விதமாக ஒரு சிறப்பான மாநாடாக நம்முடைய இயக்கத்தின் வரலாறு பேசுகின்ற மாநாடாக, கொள்கையைப் பேசுகின்ற மாநாடாக அந்த மாநாடு நடக்க வேண்டும்.

அதனால்தான், உங்களையெல்லாம் நம்பி வந்திருக்கக்கூடிய அத்தனை பேரும் சிறப்பாகப் பயணத்தை மேற்கொண்டு நீங்கள் நான்கு மண்டலங்களாகப் பிரிந்து, 234 தொகுதிகளிலும் நீங்கள் சென்றடையப் போகிறீர்கள் வாக்காளர்களைமக்களைச் சந்திக்கப் போகின்றீர்கள். உங்களுடைய பயணம் சிறப்பாக அமைய வேண்டும்.

### முக்கியமான நான்கு திட்டங்கள்!

இந்த மூன்று வருடத்தில் கழக ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம் என நம்முடைய தலைவர் அவர்கள் சொன்னதையும் செய்திருக்கிறார், சொல்லாததையும் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

முக்கியமாக ஒரு நாலே நாலு திட்டம், இதை மக்களிடம் கொண்டுபோய், நீங்கள் சேர்க்க வேண்டும். நமக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி இதை மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும். முதல் திட்டம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி, மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து பயணம். ஆட்சி அமைந்ததும் முதல் கையெழுத்திட்டார் நம்முடைய தலைவர் அவர்கள். இதன் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம்தோறும் குறைந்தது ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

அதேபோல் இரண்டாவது திட்டம், இது தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம் `புதுமைப்பெண் திட்டம்' அரசுப் பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவிகள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்றால், எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அவர்களின் கல்வி ஊக்க தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது, வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய்.

அதேபோல் இன்னொரு திட்டம் இதுவும் தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்கள் பள்ளிக்கு வர வேண்டும் என்பதற்காக, அரசுப் பள்ளிகளில் `முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'. 31 ஆயிரம் பள்ளிகளில் 17 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள். குழந்தைகள் பள்ளிக்கு வர வேண்டும் படிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு இந்தத் திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது. இப்போது பக்கத்து மாநிலமான தெலங்கானாவில் இருந்து வந்து இந்தத் திட்டத்தைப் பார்த்து அவர்களுடைய மாநிலத்தில் செயல்படுத்த தொடங்கி இருக்கிறார்கள்.

### அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்!

இது நான்காவது திட்டம். இது நம்முடைய தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். எப்போது செயல்படுத்தப் போகிறீர்கள் என்று எல்லோரும் கேட்ட திட்டம். இப்போது தலைவர் அவர்கள், இந்த மூன்று மாதங்களில் அறிவித்துச் செயல்படுத்த தொடங்கியாகி விட்டது.

கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில், `கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' வாயிலாக மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக் கூடிய திட்டம். ஒரு கோடியே 18 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் கொண்டு நீங்கள் சேர்க்க வேண்டும்.

### பாதுகாப்பாக பயணம் செய்வீர்!

எல்லாவற்றையும் விட ஒரு மிக முக்கியம் 15 நாட்கள் நீங்கள் பயணம் செய்யப் போகிறீர்கள். கிட்டத்தட்ட 8,400 கிலோமீட்டர் பயணம் செய்யப் போகிறீர்கள். நீங்கள் அத்தனை பேரும் பாதுகாப்போடு பயணம் செய்ய வேண்டும்.

உங்களுடைய பாதுகாப்பும் முக்கியம். பொதுமக்களின் பாதுகாப்பும் முக்கியம். அனைத்து விதிகளையும் பின்பற்றி மிகவும் பாதுகாப்பாக பயணிக்கவும். ஏதாவது ஒரு தொகுதிக்குப் போகும்போது நேரம் ஆகிவிட்டது என்றால், அங்கே ஓய்வெடுத்துக் கொண்டு பிறகு பயணியுங்கள். உங்களுடைய குடும்பத்தினர் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். தலைவர் அவர்கள் உங்களை எல்லாம் பார்ப்பதற்கு சேலத்தில் காத்துக் கொண்டிருப்பார்.

இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும். எனவே வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள், இயக்கத்தினுடைய தோழர்கள் நற்பணி மன்றத்தை சேர்ந்த என்னுடைய தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் பயணம் மிகப்பெரிய ஒரு வெற்றிப் பயணமாக அமைய வேண்டும்.

நீங்கள் 188 பேர்களும் இந்தப் பிரச்சாரப் பயணத்தில் குறைந்தது இரண்டு மூன்று லட்சம் பேரையாவது நேரில் சந்தித்து, நம்முடைய மாநாடு எந்த நோக்கத்திற்காக நடைபெறுகின்றது என்பதைப் பொதுமக்களிடம் நீங்கள் தெரிவித்து, உங்களுடைய கடமையாற்றிப் பாதுகாப்பாக நீங்கள் எல்லாம் சேலத்திற்கு வர வேண்டும்.

உங்களை எல்லாம் நான் சேலத்தில் சந்திப்பதற்காகக் காத்துக் கொண்டிருப்பேன் என்று கூறி இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து இருக்கக்கூடிய என்னுடைய நண்பர் ராஜா தமிழ்மாறன் அவர்களுக்கும், இதையெல்லாம் சிறப்பாக ஏற்பாடு செய்த நம்முடைய அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் நற்பணி மன்றத்தை சேர்ந்த நம்முடைய அருமை சகோதரர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாகர்கோயில் மேயர் மகேஷ், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, கழக மகளிர் அணியின் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாணவர் அணித் தலைவர் ராஜீவ்காந்தி, தமிழன் பிரசன்னா, சூர்யாசே வியர், போஸ் வெங்கட், தமிழ்கேள்வி செந்தில்வேல், கழக இளைஞர் அணியின் துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, சீனிவாசன், அமைப்புச் செயலாளர் அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் துணைச் செயலாளர் சிவராஜ், ததேயூ பிரேம்குமார், புஷ்பலீலா ஆல்பன் உள்ளிட்ட மாவட்டக்கழக நிர்வாகிகள், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பாபு, கன்னியாகுமரி பேரூராட்சித் தலைவர் குமரி ஸ்டீபன் உள்ளிட்ட, அகஸ்தீசன், ஜெகநாதன், சுரேஷ், பிரின்ஸ் உள்ளிட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், நற்பணி மன்றச் செயலாளர் பி.கே.பாபு, வாகன பிரச்சாரப் பயணத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் கார்த்தி, பிரபின், ராஜ்குமார், சன் சுரேஷ்குமார் குட்டி, ரவிச்சந்திரன், ரூபன், முத்துக்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

### தி.மு.க. மாணவர் அணி சார்பில்

## மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, நவ.16-

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, திராவிட இயக்க சிந்தனை, கொள்கை, இலட்சியம், கோட்பாடுகள் ஆகிய கருத்தியலில் வலிமைமிக்கவர்களாகவும், இளைய தலைமுறையான மாணவ சமுதாயத்தினரிடம் திராவிட இயக்க சிந்தனை, கொள்கை ஆகியவற்றினை விதைக்கக் கூடியவர்களாக விளங்கிட வேண்டுமென்பதற்காகவும், அரசியலில் களமாடக்கூடிய முன்கள போர் வீரர்களாய் மாணவர் அணியினர் விளங்கிட வேண்டுமென்று, தி.மு.க. மாணவர் அணியின் வடக்கு மண்டல மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் ஏலகிரிமலையில் சிறப்பாக நடைபெற்றது.


**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9**

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.9.ந.க.எண்.இ1/3198/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| ம.அ.9.ந.க.எண்.இ1/3198/2023 ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் மண்டலம்-9, பகுதி - 24, வார்டு -111, கோபாலபுரத்தில் விளையாட்டு கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் பணி | ரூ.89.75 இலட்சங்கள் | ரூ.90,000/- | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **04.12.2023 மாலை 3.00 மணி**

ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **05.12.2023 மாலை 3.30 மணி**

**மா.வ.அ / மண்டல அலுவலர் மண்டலம் - 9**

செ.ம.தொ.இ / 6059 / ஒப்பந்தப்புள்ளி / 2023


அதனைத்தொடர்ந்து, இரண்டாவது பயிலரங்கம் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு ஆகிய 19 மாவட்டங்களின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு வருகின்ற 24.11.2023 முதல் 26.11.2023 வரை மூன்று நாட்கள் தென்காசி மாவட்டம், குற்றாலம், 'ஆர்செர்ட் வேலி ரிசார்ட்'ல் (Orchard Valley Resort) கருத்தியல் பயிலரங்கம் நடைபெற உள்ளது.

வருகிற 24.11.2023 அன்று காலை 10 மணிக்கு பயிலரங்க தொடக்கவிழா விற்கு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, எம்.பி., சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

திராவிட இயக்க கொள்கைகள், லட்சியங்கள், கருத்துகள், இயக்கத்தின் வரலாறு, இயக்க தலைவர்களின் வரலாறு, கழக ஆட்சியில் இயற்றப்பட்ட சமூகநீதி, சமூக வளர்ச்சி, சமூக சீர்திருத்தங்கள், சமத்துவத்திற்கான சட்டங்கள், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சிக்கான சட்டங்கள், திட்டங்கள், அதனால் தமிழ் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், அரசியல், பாலின சமத்துவம், எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி முறையின் சாதனைகள் ஆகியவற்றினை குறித்து நன்கு தெரிந்து அரசியலில் களமாட, கருத்தியலில் வலிமைமிக்கவர்களாய் விளங்கிட மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் பயனளிக்கும் என்ற நோக்கத்தில் இக்கருத்தியல் பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் அவர்களின் தந்தை மாரியப்பபிள்ளை அவர்கள் மறைவையொட்டி, டவுனில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2023) நேரில் சென்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் துணை மேயர் கே.ஆர்.ராஜு முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் அவர்கள், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் உட்பட பலர் உள்ளார்கள்.

---

### கிரிக்கெட் உலகக் கோப்பை:

## இறுதிப் போட்டியில் இந்தியா!

மும்பை,நவ.16-

மும்பை வான்கடே மைதானத்தில் உலகக் கோப்பைத் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா பேட்டிங் தேர்வு செய்தார். 50 ஓவர் முடிவில் இந்தியா 397 ரன்களைக் குவித்தது. கோலி 117, ஸ்ரேயாஷ் ஐயர் 105, ஷுப்மன் கில் 80 ரன்கள் எடுத்து அசத்தினார்கள்.

ஒருநாள் போட்டியில் 50வது சதமடித்து சாதனை படைத்த விராட் கோலி...



அடுத்து ஆடிய நியூசி. அணி போராடி தோற்றது. 48.5 ஓவர்களில் நியூசி. அணி 327/10 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

தொடக்க வீரர்ரகளான கான்வே, ரச்சின் ரவீந்திரா தலா 13 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர். டேரில் மிட்செல் அதிரடியாக இறுதி வரை போராடி 134 ரன்களில் ஆட்டமிழந்தார். வில்லியம்சன் 69, பிலிப்ஸ் 41 ரன்கள் எடுத்து அசத்தினார்கள். மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர்.

இந்தியா சார்பாக முகமது ஷமி 7 விக்கெட்டுகளை எடுத்து அசத்தினார். சிராஜ், பும்ரா, குல்தீப் தலா 1 விக்கெட்டுகளை எடுத்தார்கள். முகமது ஷமி ஆட்ட நாயகன் விருது பெற்றார். இந்நிலையில் உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியது.

---

### தி.மு.க. வழக்கறிஞர்அணி

## 15 மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., அறிவிப்பு

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், வருகிற 18.11.2023 (சனிக்கிழமை), காலை 9.00 மணியளவில் சென்னை8, எழும்பூர், எம்.எம்.டி.ஏ. அலுவலகம் அருகில் உள்ள "ஓட்டல் ரமடா"வில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, விழுப்புரம்வடக்கு, விழுப்புரம்தெற்கு, கள்ளக்குறிச்சிவடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணைஅமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 15 - 11 - 2023

**என்.ஆர்.இளங்கோ** எம்.பி..
செயலாளர் - தி.மு.க. சட்டத் துறை



தலைமைச் செயலகத்தில், நேற்று (15.11.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்" என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் நீர்வளத்துறை அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குழுவின் இணைத் தலைவரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சருமான அர. சக்கரபாணி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரும் உறுப்பினர் செயலருமான முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத்துறை கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, குழு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ்.குமரி, வே.மதிமாறன், சுந்தர ஆவுடையப்பன், முதன்மை தலைமைப்பொறியாளர் கு.அசோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கேரளா மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவிடம் சீரமைக்கும் பணிகளை, நேற்று (15.11.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, கோவை மண்டலத் தலைமைப் பொறியாளர் காசிலிங்கம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வரின் சீரிய நடவடிக்கையால் – கடந்த 9 மாதங்களில்

# தமிழ்நாட்டுக்கு 21.37 கோடி சுற்றுலா பயணிகள் வருகை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் தகவல்!

சென்னை, நவ.16-

தமிழ்நாட்டிற்கு 2023 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் 8,64,133 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், 21,37,71,093 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் - என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறை யின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணி கள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் செப்டம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் 8,64,133 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் செப்டம்பர் மாதம் முடிய 9 மாதங்களில் 21,37,71,093 என உயர்ந்துள்ளது.

**பூம்புகார் அலைக்கூடம் புனரமைப்பு!**

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியா குமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக் கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத் தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடு படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான ஒளிரும் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**குற்றாலத்தில் நவீன வசதிகள்!**

'தென்னிந்தியாவின் ஸ்பா'' என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், தூத்துக்குடி கடற்கரையை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நீர்விளையாட்டுக்கள் மற்றும் கடற்கரை விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும்.

இவ்வாறு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்.

### கேரள மாநிலம் வைக்கத்தில்

# தந்தை பெரியார் நினைவிடத்தில் சீரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, நவ.16-

கேரளா மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவிடம் சீரமைக்கும் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்.

கேரளா மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தை சீரமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் 30.3.2023 அன்று அறிவித்தார்கள். பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் பலமுறை கேரளா, வைக்கம் சென்று சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்து வந்தார்கள். நேற்று (15.11.2023) வைக்கம் சென்று, சீரமைப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

**நவ 30–க்குள் முடிவடையும்!**

தந்தை பெரியாரின் நினைவிடம் தரைதளம் மற்றும் முதல் தளத்தை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளது. இதில், நூலகம் 2582 சதுரடி பரப்பளவிலும், அருங்காட்சியகம் 1891 சதுரடி பரப்பளவிலும் அமைந்துள்ளது. ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 28.6.2023 அன்று துவங்கப்பட்ட சீரமைப்புப் பணிகள், நவம்பர் - 30க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக, அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1891 சதுர அடியில் அமைந்திருந்த அருங்காட்சியகத்தை தரை தளம் மற்றும் முதல் தளம் 3025 சதுர அடியில் விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழைய நூலக கட்டடத்தினை அகற்றி தரைதளத்தில் புதிய நூலகம் மற்றும் முதல் தளத்தில் தங்கும் அறைகள் 3457 சதுர அடிகளில் கட்டப்பட்டு வருகின்றன.

சிறுவர் பூங்கா மற்றும் திறந்தவெளி அரங்கம் ஆகியவைகளையும் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அருங்காட்சியக பூங்கா மேம்படுத்தும் பணி சுற்றுச்சுவரினை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிகளும் நுழைவு வாயில் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**பணிகளின் தரத்தினை அமைச்சர் ஆய்வு செய்தார்!**

வைக்கம், தந்தை பெரியார் நினைவிடம் சென்ற உடனே அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு பணியாக நேரில் பார்த்து ஆய்வு மேற்கொண்டார். நூலகம் மற்றும் அருங்காட்சியகம் கட்டட பூச்சு பணி மற்றும் டைல்ஸ் பதிக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. சிமெண்ட் பூச்சு பணிகளின், சிமெண்ட், மணல் ஆகியவற்றின் தரத்தினை ஆய்வு செய்த அமைச்சர், டைல்ஸ் பதிக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்கள். சுற்றுச்சுவர் மற்றும் இதர பணிகளையும் ஆய்வு செய்து பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, கோவை மண்டலத் தலைமைப் பொறியாளர் காசிலிங்கம் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.







முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 67.83 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. நவாஸ் கனி, எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. முத்துராஜா, எம். சின்னதுரை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஐ.சா. மெர்சி ரம்யா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். தலைமைச் செயலகத்திலிருந்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில் ரூ.67.83 கோடியில் அரசு பல் மருத்துவக் கல்லூரி -

# ரூ.8.89 கோடியில் பொது சுகாதாரத்துறை கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 16 -

புதுக்கோட்டையில் ரூ.67.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத் துறை கட்டடங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வுத் துறை சார்பில் 67.83 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக் கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் புதுக் கோட்டை மாவட்டத்தில் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48", நலவாழ்வு நடைப்பயிற்சி 8 கி.மீ. சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**தமிழ்நாட்டின் மூன்றாவது பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை திறந்து வைத்தல்!**

70 ஆண்டுகளுக்கு பிறகு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக, புதுக் கோட்டை யில் 67 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கல்லூரியில் 2023-2024 ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் 50 மாணவர்கள் சேர்க்கைக்காக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை 10.14 ஏக்கர் பரப்பளவில் மருத்துவமனை மற்றும் நிர்வாகக் கட்டடம், மாணவ - மாணவியர் விடுதிக் கட்டடம், ஆசிரியர் மற்றும் முதல்வர் தங்கும் விடுதி போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள் ளது. கூடுதலாக, பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான தேவையான அதிநவீன உபகரணங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப் பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தேவையான ஆசிரியர், நிர்வாகம், மற்றும் கல்விசாரா பணிகளுக்கு 148 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ள்ளது.

இப்புதிய புதுக் கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இந்தியாவி லேயே மிகச் சிறந்த கட்டமைப்புகளுடன் அமைக் கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழகத்தின் மத்திய பகுதியில் உள்ள ஏழை , எளிய மக்களுக்கு தரமான பல் மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கு வழிவகை ஏற்படும்.

**பொது சுகாதாரத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள 27 புதிய கட்டடங்களை திறந்து வைத்தல்!**

புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி சுகாதாரப் பகுதி மாவட்டங்களைச் சார்ந்த கீழாநிலை புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலை யத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ராசநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், பாலாண்டம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத் தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், நீர்பழனி துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், மலைக்குடிபட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்டடம், பரம்பூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மேலமுத்துக்காடு துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், புலியூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நாகுடி அரசு ஆரம்ப சகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ஏம்பாவயல் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கோட்டைப்பட்டிணம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மணமேல்குடி துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், மும்பாலை துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விச்சூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், பி.ஆர். பட்டிணம் துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், நிலையூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கொத்தமங்கலம் கிழக்கு துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், கும்மங்குளம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், குப்பக்குடி துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், எல்.என். புரம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விராலிப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், வேங்கிடக்குளம் துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், முத்துப்பட்டிணத்தில் செவிலியர் குடியிருப்பு, கட்டு மாவடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நெல்வேலி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், அழியாநிலை துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம், கருக்காக்குறிச்சி துணை சுகாதார நிலை யத்திற்கான கட்டடம்;

என மொத்தம் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் புதுக் கோட்டை யிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. நவாஸ் கனி, எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. முத்துராஜா, எம்.சின்னதுரை, புதுக் கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஐ.சா. மெர்சி ரம்யா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்திலிருந்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க.வுக்குப் பாடம் புகட்டுங்கள்!

## ஐக்கிய விவசாயிகள் முன்னணி வேண்டுகோள்!

புதுதில்லி, நவ. 16 -

விவசாயிகளுக்கு எதிரான கார்ப்பரேட் ஆதரவு பா.ஜ.க.வுக்கு பாடம் புகட்டுங்கள் என சட்டமன்ற தேர்தல் நடைபெறும் 5 மாநில மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு சம்யுக்தா கிசான் மோர்ச்சா (ஐக்கிய விவசாயிகள் முன்னணி) அழைப்பு விடுத்துள்ளது. இதுதொடர்பாக சம்யுக்தா கிசான் மோர்ச்சா வெளியிட்டுள்ள அறிக்கையில், "விவசாயிகளுக்கு எதிரான 3 வேளாண் சட்டங்களை ஒன்றிய மோடி அரசு திணித்ததை எதிர்த்து அனைத்து விவசாய அமைப்புகள் இணைந்து 380 நாள் நீண்ட போராட்டத்தை நடத்தின. இந்த போராட்டத்தின் பொழுது 725 விவசாயிகள் வீரமரணம் அடைந்தனர்.



விவசாயிகளின் மரணங்களுக்கு ஒன்றிய அரசு, குறிப்பாக பிரதமர் மற்றும் ஒன்றிய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பொறுப்பேற்க வேண்டும். 3 வேளாண் சட்டத்திற்கு எதிராக விவசாயிகள் இயக்கம் துவங்கியதும், ஒன்றிய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், விவசாயி களின் தலைவர்களுடன் மூன்று முறை பேச்சு வார்த்தை நடத்தினார். மூன்று முறையும் பேச்சுவார்த்தை தோல்வியடைந் தது. 380 நாட்களுக்குப் பிறகு விவசாயிகளின் விடாமுயற்சி மற்றும் உறுதியான எதிர்ப்பு காரணமாக மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டிய கட்டாயம் ஒன்றிய அரசுக்கு ஏற்பட்டது. வேளாண் சட்டங் களைத் திரும்பப் பெற்ற பின் விவசாயிகளுக்கு எழுத்துப்பூர்வமான உறுதி மொழியை வேளாண் துறை செயலாளர் ஸ்ரீ சஞ்சய் அகர்வால் அளித்தார். இந்த எழுத்துப் பூர்வ உறுதிமொழியையும் நிறைவேற்றாமல் விவசாயிகளுக்கு துரோகம் இழைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஒன்றிய அரசு,

விவசாய அமைப்புகளின் ஒப்புதலுடன் குறைந்த பட்ச ஆத ரவு விலைக்கான சட்ட உத்தரவாதத்திற்காக சாதாரண குழுவைக் கூட அமைக்கவில்லை. மேலும் அளிக்கப்பட்ட பிற உத்தரவாதங்களையும் நிறைவேற்றவில்லை. இதனால் எஸ்.கே.எம். அமைப்பு மீண்டும் ஒருமுறை வேளாண் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியது. வழக்கம் போல அவர் பல்வேறு உறுதிமொழிகளை அளித்தார். ஆனால் இன்றளவும் ஒன்றைக் கூட ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை.

**ஒன்றிய வேளாண் அமைச்சரை வீழ்த்துவீர்!**

மத்தியப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் ஒன்றிய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மொரேனா மாவ ட்டத்தில் உள்ள திமானி தொகுதியில் போட்டியிடுகிறார். அவர் போட்டி யிடும் சட்டமன்ற தொகுதியில் கூட தினை மற்றும் பிற பயிர்கள் குறைந்த பட்ச விலையில் கொள்முதல் செய்யப் படுவதில்லை. விவசாயிகள் கடனில் தத்தளித்து, விவசாயத்தை கைவிட்டு நகர்ப்புற கூலி வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 15 லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்துள்ளது; ஆனால், விவசாயிகளின் கடன் தள்ளுபடியை அமல்படுத்த ஒன்றிய அரசு மறுத்து வருகிறது.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பட்ஜெட் ஒதுக்கீடும் குறைக் கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நியாய மான கோரிக்கைகளை நிறைவேற்ற எந்த உறுதியான நடவடிக்கையும் எடுக்க வேளாண் அமைச்சர் தயாராக இல்லை.

இதனால் மத்தியப்பிரதேச மாநில திமானி தொகுதி வாக்காளர்கள் விவசாயிகளுக்கு எதிரான ஒன்றிய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமரை தண்டிக்க வேண்டும். அவரைத் தோற்கடிக்க வேண்டும். நரே ந்திர சிங் தோமரை மட்டுமல்லாமல், சட்டமன்ற தேர்தல் நடைபெறும் மாநில மக்கள், விவசாயிகள், 'விவசாயிகளுக்கு எதிரான கார்ப்பரேட் ஆதரவு பா.ஜ.க.வுக்கு' பாடம் கற்பிக்க வாக்களியுங்கள்" என்று ஐக்கிய விவசாயிகள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

### தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகரமாக்க வேண்டுமென்ற இலக்கு

# தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிச்சயமாக கொண்டு செல்லும்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, நவ. 16 -

தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகரமாக்க வேண்டுமென்ற இலக்கை அடைய தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிச்சயமாக கொண்டு செல்லும் என "தினத்தந்தி" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.




அது வருமாறு:

தமிழ்நாடு எப்போதுமே விளையாட்டுகளில் தனி முத்திரை பதித்து வருகிறது. பண்டைய காலங்களில் இருந்தே பல்வேறு வகையான விளையாட்டுகளில் இளைஞர்கள் ஆர்வத்தோடு இருந்திருப்பதை நமது இலக்கியங்களில் காணலாம். தமிழக அரசும் விளையாட்டுத்துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறது. உலகமே வியக்கும் வண்ணம் 'செஸ் ஒலிம்பியாட்' போட்டியை சிறப்பாக நடத்திய பெருமை தமிழக அரசுக்கு உண்டு. அதில் நல்லதொரு பங்களிப்பை நல்கிய உதயநிதி ஸ்டாலினை அமைச்சரவையில் சேர்த்த முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையை வழங்கினார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், விளையாட்டு மேம்பாட்டுக்காக பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். சமீபத்தில், சீனாவில் நடந்த ஆசிய விளையாட்டு வீரர்கள் விளையாட்டு போட்டியில், இந்திய வீரர்கள் 107 பதக்கங்களை வென்றார்கள். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 வீரர்கள் மட்டும் 9 தங்கம், 11 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் என்று 28 பதக்கங்களை பெற்றனர். பதக்கப் பட்டியலில் தமிழ்நாடு, இந்தியாவில் 5வது இடத்தில் இருக்கிறது. இதை முதல் இடத்துக்குக் கொண்டுவர முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழு முயற்சி எடுத்து வருகிறார். திறமை இருந்தும் போதுமான பயிற்சியோ, உபகரணங்களோ, ஊட்டச்சத்து உணவோ, தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ள போதிய நிதி வசதியோ இல்லாமல் தவிக்கும் விளையாட்டு வீரர்களுக்கு கைகொடுத்து உதவ, தமிழக அரசு 'தமிழ்நாடு சாம்பியன்ஸ்' என்ற அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது.

மாநிலம் முழுவதும் அதிநவீன உள் கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், விளையாட்டு சூழலை உருவாக்கிடவும், பெரு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட

நன்கொடையாளர்களிடம் இருந்து பெறக்கூடிய நன்கொடைகளை வைத்து செயல்படுகிறது, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை. இந்த அறக்கட்டளை மூலம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தேவையான நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த மே மாதம் 8ந் தேதி தொடங்கி வைக்கப்பட்ட இந்த அறக்கட்டளைக்கு, தமிழக அரசு சார்பில் முதல் கட்டமாக ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனது சொந்த நிதியில் இருந்து முதல் -அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.5 லட்சம் வழங்கினார்.

இதுவரை நன்கொடையாக ரூ.21 கோடியே 6 லட்சத்து 2 ஆயிரத்து 121 பெறப்பட்டு இருக்கிறது. 228 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.4 கோடியே 63 லட்சத்து 92 ஆயிரத்து 737 வழங்கப்பட்டுள்ளது. திறமை இருந்தும் நிதி வசதி இல்லாமல் பல்வேறு பயிற்சிகளை பெற முடியாமலும், போட்டிகளில் பங்கேற்க செல்ல முடியாமலும் தவிக்கும் வீரர், வீராங்கனை களுக்கு தமிழக அரசு தொடங்கியுள்ள, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நல்ல உதவிகளை செய்து வழிகாட்ட தயாராக காத்து நிற்கிறது.

எனவே, எங்கோ குக்கிராமத்தில் வசிக்கும் திறமைசாலிகள் கூட இந்த உதவியைப்பெற்று வெற்றிகளை குவிக்க முடியும். அவர்களை அடையாளம் கண்டு, இந்த அறக்கட்டளையின் உதவியை பெற்றுக் கொடுக்க தமிழக அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், உள்ளாட்சி அமைப்புகளும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகரமாக்க வேண்டும் என்ற இலக்கை அடைய தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிச்சயமாக கொண்டு செல்லும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சென்னையின் முக்கிய சாலைகளில்

# தமிழ்நாடு அரசின் நடவடிக்கையால் மழைநீர் தேங்கவில்லை!

## வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி!

*சென்னை, நவ. 16 -*

*தமிழ்நாடு அரசின் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், சென்னையில் கன மழை பெய்தும் தண்ணீர் தேங்கவில்லை என்று வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்பேரில் சென்னை முழுவதும் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டது. இதன் காரணமாக, சென்னையின் முக்கிய இடங்களில் தொடர்மழை பெய்தாலும் மழைநீர் தேங்காத சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டிலயே அதிகபட்சமாக சென்னையில் 19 சென்டி மீட்டர் மழை பதிவானது. விடிய விடிய கனமழை கொட்டித் தீர்த்த நிலையில், முக்கிய சாலைகளான திரு.வி.க.சாலை, புதுப்பேட்டை டேம்ஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கவில்லை.*

*அதேபோல், சுரங்கப்பாதைகளிலும் தாழ்வானப் பகுதிகளிலும் மழைநீர் தேங்கவில்லை. இதனால், எவ்வித சிரமமும் இல்லாமல் வாகனங்களை இயக்குவதாக, வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.*

*இந்நிலையில் டெல்டா மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தென்மண்டல வானிலை ஆய்வு மையத் தலைவர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.*

*சென்னை நுங்கம்பாக்கத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தென்மண்டல வானிலை ஆய்வு மையத் தலைவர் பாலச்சந்திரன்,*

*காற்றழுத்த தாழ்வு பகுதி மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாகவும், இது 17ம் தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று ஒடிசா அருகே நிலவக் கூடும் என தெரிவித்தார். மேலும், டெல்டா மாவட்டங்கள், புதுக் கோட்டை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் பாலச்சந்திரன் தெரிவித்தார்.*

**மணிக்கு 40 கிமீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்!**

*தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகளில் மணிக்கு 40 கிமீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் பாலச்சந்திரன் அறிவுறுத்தினார். ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், அடுத்த 24 மணி நேரத்தில் தமிழ்நாடு, புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.*



திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களை, நேற்று (15.11.2023) கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. சந்தித்து, தான் எழுதிய, "பெரியார் அம்பேத்கர் – இன்றைய பொருத்தப்பாடு" என்ற புத்தகத்தை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் சார்பாக தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுய தொழில் தொடங்குவதற்கான கடனுதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றியக்குழுத் தலைவர் எல்.இதயவர்மன், ஒன்றியச் செயலாளர்கள் வீ.தமிழ்மணி, சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ். நரேந்திரன், சண்முகம், பேரூர் செயலாளர் யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா

# திருவண்ணாமலையில் கல்லூரி, பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம்!

## பேரவைத்தலைவர் மு.அப்பாவு தலைமையில் அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைக்கிறார்!

திருவண்ணாமலை, நவ. 16 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரி, பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. கருத்தரங்கம் சட்ட மன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு தலைமையில், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தொடங்கி வைக்கிறார்.

இன்று (16.11.2023 - வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, அருணை பொறியியல்கல்லூரி, கலையரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு தலைமை வகித்து, உரையாற்றுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சட்டமன்ற பேரவை செயலாளர் முனைவர் கி. சீனுவாசன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

பிற்பகல் 2.30 மணிக்கு திருவண்ணாமலை, எஸ். கே.பி.வனிதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடை பெறுகிறது.

சட்டமன்ற பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.ஞானசேக ரன், மாநில தடகள சங்க துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், எஸ்.கே.பி கல்வி குழுமங்கள் தலைவர் கு.கருணாநிதி ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

நிறைவாக சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் ந.ரவிச்சந்திரன் நன்றி கூறுகிறார்.

17.11.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு ஆரணி, சுப்பிரமணிய சாஸ்த்திரியர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.

விழாக்கான ஏற்பாடுகளை சட்டப்பேரவை இணைச்செயலாளர் வ.பூபாலன், துணைச் செயலாளர் சீ.உஷா, சார்புச் செயலாளர் ஏ.மகாலட்சமி ஆகியோர் செய்து வருகின்றனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் மண்டலம் – 4 வார்டு – 55 எஸ் ஆர் எஸ் நகர் குட்வில் நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் கால்வாயிகள் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் தேங்குவதாக பொதுமக்கள் தெரிவித்ததின் அடிப்படையில் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை வலியுறுத்தி அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டப்போது. உடன் மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, மாநகராட்சி பொறியாளர் ஆனந்தஜோதி, உதவி பொறியாளர் உடனிருந்தனர்.






ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் தொழில்பேட்டையில் செயல்பட்டு வரும் தொழிற்சாலையில் இயங்கும் பூஜ்ஜிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யப்பன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்/செயலர் கண்ணன், இணை தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் மலையாண்டி, ஈரோடு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சதீஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியா முழுவதும் வெவ்வேறு பெயர்களில் முதல்வரின் மகளிர் உரிமைத் தொகை திட்டம்!

# தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 16 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த மகளிர் உரிமைத் தொகை திட்டம் இன்று வெவ்வேறு பெயர்களில், வடிவங்களில் இந்தியா முழுவதும் பரவி இருக்கிறது என்றும் இது தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமைச் சேர்த்துள்ளது என்றும் ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு மகளிர் நலன் அரசு. கல்வி மற்றும் பொருளாதார ரீதியில் மகளிர் அதிகாரம் பெற்றால் தான் ஒரு நாடு மிகப்பெரிய உயரங்களை எட்ட முடியும் என்பதை முற்றிலும் உணர்ந்தவர் அவர். அதனால் தான் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தியவர் மு.க.ஸ்டாலின், 2021ல் முதல்வராக பதவி ஏற்ற பிறகு அவர் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் மகளிர் நலன் கொண்டதாகவே மாறி இருக்கிறது என்றால் இந்த சமூகத்தின் மீது, தமிழ்நாட்டின் வளர்ச்சி மீது மு.க.ஸ்டாலின் கொண்ட




அக்கறை தெளிவாக புரியும்.

கொரோனாவின் தாக்கத்தால் நலிவடைந்த தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை தலை நிமிர வைத்தார். இந்த தீபாவளி கொண்டாட்டம் அதை படம் பிடித்து காட்டியிருக்கிறது. வழக்கமான கொண்டாட்டத்தை விட, மிக பிரமாண்டமான கொண்டாட்டமாக இந்த தீபாவளி பண்டிகை அமைந்து இருக்கிறது. காரணம் திராவிட மாடல் ஆட்சியில் அடிப்படையில் பெண்களுக்கு அதிக பொருளாதாரத்தை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டா லின் அரசு தான். கல்லூரி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் 21000, குடும்பத்தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக மாதம் 71000, அரசு பஸ்களில் பயணம் செய்யும் மகளி ருக்கு இலவச பஸ் பயணம் மூலம் ஒவ்வொரு பெண்ணும் கல்வியோடு சேர்த்து தங்கள் பொருளா தாரத்தையும் வலுப்படுத்திக்கொண்டனர் என்றால் அது மிகையல்ல. பெண்கள் கையில் கொடுக்கப்ப டும் பணம் அந்த குடும்பத்தையே உயர்த்தும். இந்த தீபாவளியின் பிரமாண்ட கொண்டாட்டம் அதைத்தான் வெளிப்படுத்தியது.

பட்டாசு, இனிப்புகள், புத்தாடைகள் என எங் கெங்கும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அதிக அளவு விற்பனையால் உள்ளூர் வணிகர்களும் மகிழ்ச்சி அடைந்த பண்டிகையாக இந்த தீபாவளி அமைந்தது. மகளிர் உரிமைத்தொகை மூலம் | கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 குடும்பத் தலைவி களுக்கு தமிழ்நாடு அரசு மாதம் தோறும் வழங்கும் 71138 கோடி, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தோடு கலந்து மிகப்பெரிய பொருளாதார மலர்ச்சியை ஏற்படுத்தி இருப்பதை இந்த பண்டிகை நாளில் அனைவரும் உணர முடிந்த ஒன்று. அடுத்த ஒருவருடத்தை கணக்கில் எடுத்துக் கொண்டால் மகளிர் உரிமைத்தொகை மூலம் குடும்பத் தலைவிகளின் கைகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கும் தொகை மட்டும் 13,656 கோடி. இந்த தொகை தமிழ்நாட்டின் சமூக பொருளாதாரத்தில் எத்தனை மாற்றங்களை உருவாக்கும் என்பதை உணரும் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிய இந்த திட்டம் இந்தியாவுக்கே முன்மாதிரியான திட்டம் என்பது அனைவருக்கும் புரியும்.

அதனால் தான் தமிழ்நாட்டை பின்பற்றி கர்நா டகா காங்கிரஸ் அரசும், மகளிர் நலன் தொடர்பான அத்தனை திட்டங்களையும் அமல்படுத்தி உள்ளது. அதே போல் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களிலும் இந்த திட்டத்தை தொடங்க இருப்பதாக காங்கிரஸ் அறிவித்து உள்ளது. இதை இலவச கலாச்சாரம் என்றார் பிரதமர் மோடி. இப்போது மபி தேர்தலில் வெற்றி பெற மகளிருக்கு ஆண்டுக்கு 712 ஆயிரம் வழங்கப்படும் என்று பா.ஜ அறிவித்து இருக்கிறது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த மகளிர் உரிமைத் தொகை திட்டம் இன்று வெவ்வேறு பெயர்களில், வடிவங்களில் இந்தியா முழுவதும் பரவி இருக்கிறது. இது தமிழ்நாட்டிற்கு பெருமையான ஒன்று.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கடந்த மாதத்தில் மட்டும் கள்ளச்சந்தையில் விற்பதற்காக

# கடத்தப்பட்ட 21.9 லட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல்! 842 பேர் கைது!

சென்னை: செப். 16-

கடந்த மாதத்தில் மட்டும் கள்ளச்சந்தையில் விற்பதற்காக கடத்தபட்ட 21.9 லட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 842 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டம் / சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது. அவ்வாறு, விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களை சிலர் முறைகேடாக கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடுவோர் / உடந்தையாக செயல்படுவோர் மீது, இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 மற்றும் தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் வழக்கு பதிவு செய்து உரிய மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம், 1980ன் படி அவ்வப்போது தடுப்பு காவலிலும் வைக்கப் பட்டு வருகின்றனர். கடந்த 01.10.2023 முதல் 31.10.2023 வரையிலான ஒரு மாத காலத்தில் கள்ளச்சந்தையில் விற்பதற்காக கடத்த முயன்ற, ரூ1.97,070/ (ரூபாய் இருபத்தொரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எழுபது மட்டும்) மதிப்புள்ள 3474 குவிண்டால் பொது விநியோகத்திட்ட அரிசி, 289 எரிவாயு உருளைகள், 691கிலோ கோதுமை, 230 கிலோ துவரம்பருப்பு, 660 லிட்டர் மண்ணெண்ணெய், 440 பாக்கெட் பாமாயில், சர்க்கரை 20 கிலோ ஆகியவையும், மேற்கண்ட கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 161 வாகனங்களும் கைப்பற்றுள்ளன. ஈடுபட்ட 842 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980ன் கீழ் 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி**
**நவம்பர் 16 (1999)**



மருத்துவரான இவர், திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1989ஆம் ஆண்டு சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தொகுதி வாழ் மக்களுக்காக பணிபுரிந்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் எழுத்தாளர் கலைஞர் முத்தமிழ் தேரினை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், எம்.பி,எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. நகர மன்றத் தலைவர் எஸ்.முத்துதுரை, மாவட்ட துணைச் செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து, காரைக்குடி நகரக் கழகச் செயலாளர் என்.குணசேகரன் ஆகியோர் உள்ளனர்.



வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில் கடலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வில்வநகர் பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் குளத்தை தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் அருண்தம்புராஜ், மாநகர மேயர் சுந்தரிராஜா, கடலூர் காவல் கண்காணிப்பாளர் ராஜாராம், துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின்

# தொகுதி IV க்கான போட்டித்தேர்வு சார்ந்த இணையதள பயிற்சி வகுப்புகள்!

## மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகோள்!

சென்னை, நவ.16-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தவுள்ள தொகுதி IV (Group IV)க்கான தகுதித் தேர்வுகள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. இந்த தேர்வுகளில் அதிக அளவில் ஊரகப்பகுதி மாணவர்கள் மற்றும் பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற வசதிவாய்ப்பற்ற மாணவர்கள் கலந்து கொண்டு தேர்ச்சி பெறும் வகையில் அண்ணா நிர்வாகப்பணியாளர் கல்லூரியில் இணையத்தள பயிற்சி வகுப்புகள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, சீரிய முறையிலும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டும் இணைய வழிப் பயிற்சி வகுப்புகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

தகுதி வாய்ந்த அனைவரும், தங்களிடமுள்ள திறன் செல்லிடைப்பேசி (Smart Phone) வாயிலாக இந்த இணைய வழி வகுப்புகள் மூலம் இலவசமாக பாடங்களைக் கற்று தகுதித்தேர்வில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி II மற்றும் IIA மற்றும் தொகுதி I பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் அண்ணா நிர்வாகப்பணி யாளர் கல்லூரியின் இணைய வழி வகுப்புகளாக நடைபெற்று வருகிறது. இதனை பயன்படுத்தி அதிகளவிலான கிராமப் புற மற்றும் எளிய மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த தொகுதி IV க்கான பயிற்சி வகுப்புகள் 13.11.2023 முதல் தொடங்கப்பட்டு AIM TN வலைதள பக்கத்தில் ஒளிபரப்பப்பட உள்ளது. சிறந்த பாட வல்லுனர்களைக்கொண்டும், பாடத் திட்டங்களை தொகுதி வாரியாக வடிவமைத்தும், நெறிப்படுத்தப்பட்ட இந்த பயிற்சி வகுப்புகள் தினந்தோறும் நடத்தப்படும். ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் மாதிரி வினாத்தாள் வெளியிடப்பட்டு மாதிரி தேர்வு நடத்தி அதனை மதிப்பீடு செய்து முடிவுகள் வெளியிடப்படும்.

மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் நேரலை மூலம் வினாத்தாள் குறித்த விவாதம் நடைபெறும். இதன்மூலம் மாணாக்கர்கள் தவறுகளை களையவும் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளவும் இயலும். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV தேர்வினை முனைப் புடன் எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் AIM TN(You Tube channel) மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர்

# பி.ஜி.சிவகுமார் இல்லத் திருமண விழா!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. - அமைச்சர் ஆர்.காந்தி - சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வாழ்த்து!

## திருத்தணி எஸ்.சந்திரன் தலைமை! டி.ஜெ.கோவிந்தராஜன் - எஸ்.சுதர்சனம் - வி.ஜி.ராஜேந்திரன் பங்கேற்பு!

திருவள்ளூர், நவ. 16

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவக்குமார் இல்லத் திருமண வரவேற்பு விழா (18.11.2023 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, திருத்தணி, மேட்டுத் தெரு, செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமணம்(19.11.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணிக்குமேல் நடைபெறுகிறது.

இவ்விழாவில்திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவக்குமார் வரவேற்புரை ஆற்றுகிறார்.

உதட்டுப்பேட்டை பேரூர் செயலாளர் டி.ஆர். கே.பாபு, திருத்தணி நகர செயலாளர் வி.வினோத் குமார், மாவட்ட பிரதிநிதி கே.எம்.சங்கரன், மா.கீரண், சி.எம்.இரவி, ஜே.டி.சஞ்சய் காந்தி, டி.எம்.சுகுமார், பி. ரவிந்திரநாத், ஜெ.எம். கோவிந்தசாமி, டி.எம்.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, முன்னாள் அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ, இ.ஏ.பி.சிவாஜி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் இ.எஸ். எஸ்.இராமன், திருத்தணி எம்.பூபதி, ஓ.ஏ.நாகலிங்கம், ஆர்.வினோத்காந்தி, டி.அன்பழகன், கே.ஜி.வி.உமாமகேஸ்வரி, மு.சரஸ்வதி பூபதி, கே.திராவிடபக்தன், வி.சி.ஆர்.குமரன், பா.சிட்டிபாபு, பி.ராஜேஸ்வரி ரவிந்திரநாத், மிதுன் சக்கரவர்த்தி, கிஷோர் ரெட்டி, உதயமலர் பொன்பாண்டியன், ஜெயபால், பொன். சு.பாரதி, எஸ்.ஆர்.செங்குட்டுவன், சி. ஜெ.செந்தில்குமார், ஸ்ரீதர், மு.நாகன், கே.எஸ்.அசோக் குமார், ஜி.ரவீந்திரன், பா. ஆர்த்தி ரவி, என்.கே.கிருஷ்ணன், பி.பழனி, சி.என்.சண்முகம், ஜி.ஜே.சீனிவாசன், பி.டி.சந்திரன், கூளூர் ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ. ரமேஷ், அன்பரசு, எம்.ஜே. ஜோதிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பொதட்டூர்பேட்டை பேரூராட்சி, 16 வது வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் பி.எஸ்.சதீஷ்குமார்

### கிண்டி - வேளச்சேரி - ஆலந்தூர் - பெருங்குடி பகுதிகளில்

# தொடர் மழை - களப் பணிகளை துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆய்வு!

## என்.சந்திரன் - எம்.கிருஷ்ணமூர்த்தி - மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு!

சென்னை, நவ. 16 -

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர், அடையாறு மற்றும் பெருங்குடி மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள் துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி, ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் உள்ள குளத்தினை துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று (15.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, குளத்தினை ஆழப்படுத்திட அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு 176க்குட்பட்ட வேளச்சேரி உள்வட்ட சாலை, கல்கி நகர் வடிகாலில் இருந்து வீராங்கல் ஓடையில் மோட்டார் பம்பு மூலம் மழை நீரினை வெளியேற்றுவதையும்,

ஆலந்தூர் மண்டலம், வார்டு156, வி.ஜி.என். லட்சுமி நகர் மற்றும் காவேரி தெருவில் மழைநீர் வடிகாலில் இருந்து 100 குதிரைத் திறன் கொண்ட இராட்சத மோட்டார் பம்புகள் மூலம் மணப்பாக்கம் கால்வாயில் மழைநீர் வெளியேற்றப்படுவதையும், பெருங்குடி மண்டலம், வார்டு188ல் மடிப்பாக்கம் பகுதியின் அனைத்து தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் இருந்து 100 குதிரைத் திறன் கொண்ட இராட்சத மோட்டார் மூலம் மயிலை பாலாஜி நகர் கால்வாயில் வெளியேற்றப்படுவதையும், கைவேலி, பஜார் ரோடு கால்வாய் மற்றும் வீராங்கல் ஓடை சேருமிடத்திலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு மழைநீர் செல்வதையும் துணை மேயர் மு.மகேஷ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறின்றி மழைநீர் வெளியேற்றும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு விழிப்புணர் வுடன் பணியாற்றிடவும் துணை மேயர் இந்த ஆய்வின் போது அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மண்டலக் குழுத் தலைவர்கள் என்.சந்திரன் (ஆலந்தூர்), எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), மாமன்ற உறுப்பினர்கள் ஜெ.செல்வேந்திரன், திருமதி சமீனா செல்வம், வே.ஆனந்தம், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் செயல்வீரர் கூட்டம் திருத்தணி அடுத்த ஜிஆர்டி ஹோட்டலில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ பல்வேறு கழக வளர்ச்சி பணிகளை குறித்து ஆலோசனைகளை வழங்கினார். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், கே.எம். சுப்பிரமணியம், தொகுதி பார்வையாளர்கள் ராஜா குப்புசாமி, சேப்பாக்கம் வி.பி.மணி, ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், பி.பழனி, வி.வினோத்குமார், சி. ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், சி.சு.ரவிச்சந்திரன், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், டி.ஆர்.கே.பாபு, எம்.ஜி.ஜோதிக்குமார் உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் துவக்கி வைத்தார்! சென்னை வடகிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# மாவட்ட அளவிலான பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு - கட்டுரைப்போட்டி!

## கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - தி.மு.தனியரசு - குறிஞ்சி எஸ்.கணேசன் - வை.மா.அருள்தாசன் - எம்.எம்.செந்தில் பங்கேற்பு!

சென்னை, நவ. 16-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படியும் சென்னை வடகிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டி 14.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 11மணியளவில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தேரடி வடக்கு மாட வீதி டி.கே.பி. திருமண மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது.

மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு. தனியரசு, மேற்கு பகுதி செயலாளர் வை.மா. அருள்தாசன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியை சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் - கழக மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் 300க்கும் மேற்பட்டவர்கள் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு அவர்களின் சிறப்பான திறமைகளை வெளிகாட்டினர். பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு தொகை மற்றும் வெற்றி பெற்ற சான்றிதழ் முதல் பரிசு 10000/- இரண்டாம் பரிசு 7000/- மூன்றாம் பரிசு 5000/- வழங்கப்பட்டது.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு. தனியரசு, மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், மேற்கு பகுதி செயலாளர் வை.மா. அருள் தாசன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசினை வழங்கினர் மற்றும் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் சான்றிதழ்களும் ஆறுதல் பரிசும் ( TIFFIN BOX ) வழங்கப்பட்டது.

போட்டியில் கலந்து கொண்ட மாணவ - மாணவிகள் , ஆசிரியர்கள், கழக தோழர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் நடுவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கவுரவப்படுத்தினர்.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், பொதுக்குழு உறுப்பினர் டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன், பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசை தம்பி, பகுதி துணை செயலாளர் எம். வீ.குமார், பொருளாளர் ஆர்.குமரேசன், 7வது வட்ட கழக செயலாளர் தா.கார்த்திகேயன், 10வது வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ் செல்வன், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதி நிதிகள், வட்ட கழக நிர்வாகி கள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள், கழக தோழர்கள் கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை சென்னை வடகிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம். செந்தில் மற்றும் துணை அமைப்பாளர்கள் லிவிங்ஸ்டன் ராஜ் குமார், என்.கே.பி.நந்தா, லிங்கேஷ், தினேஷ்வேலன் ஆகியோர் செய்திருந்தனர்.

### கேபிள் டி.வி.எம்.ராஜா தலைமை!

# 13வது வட்ட கழக பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. பங்கேற்பு!

சென்னை நவ.16-

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வட்ட கழக தி.மு.க சார்பில் பாக முகவர்கள் மற்றும் தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் (11.11.2023 சனிக்கிழமை) மாலை ஜி.டி.ஆர். திருமண மாளிகை, சாத்தங்காடு, திருவொற்றியூரில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் கேபிள்.டிவி எம்.ராஜா தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு கலந்து கொண்டு வருகிற நாடாளுமான்ற தேர்தலில் கழக நிர்வாகிகள் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது குறித்தும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கியதுடன் பரிசு வழங்கினார்.

மேலும்திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வட்ட தி.மு.க மன்றம் சார்பில் இந்த வருடம் வாடகை மூலம் வந்த வருவாயை கழகத்தினர் 130 நபர்களுக்கு ரூபாய் 1000 வீதம் பொற்கிழி மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது

இதில் சுசீலாராஜா எம். சி,பொதுக்குழு உறுப்பினர் டி.ஏ.ராஜி, எம்.வி. குமார், குமரேசன், பிரபாவதி, மதிவாணன், மனோகரன், சுந்தர்ராஜ், பசுபதி, டி.எஸ்.பிரசாத், ஜானகிராமன், நடராஜன், பாலமுருகன், தட்சிணாமூர்த்தி, தங்கமணி, அன்பழகன், பாஸ்கர், அருள், அசோகன், சிவா, சேகர், செல்வராஜ், தனசேகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 10, 11, 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு அட்டவணை!

## இன்று வெளியாகிறது !

சென்னை, நவ 16-

10, 11, 12ம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு அட்டவணை நாளை வெளியாகிறது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்; 2023 - 2024ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்விற்கான தேர்வுக்கால அட்டவணை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் இன்று 16.11.2023 (வியாழக்கிழமை) காலை 9.30 மணிக்கு கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கட்டட வளாகத்தில் வெளியிடப்படவுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல், நீட், ஜே.இ.இ. நுழைவுத் தேர்வுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அட்டவணை வெளியிடப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. மார்ச் மாத ஆரம்பத்தில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் தொடங்க திட்டமிட்டதாகவும் கூறப்படுகிறது.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் காத்திருப்பு தெற்கு அஞ்சாமனை கிராமத்தை சேர்ந்த விவசாயி கனகராஜ் உயிரிழந்தமையால் அவரின் குடும்பத்திற்கு சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நிவாரண நிதியாக ரூ.1 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, ஒன்றியச் செயலாளர் பஞ்சு.குமார் மற்றும் பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (15.11.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "எழுத்தாளர் – கலைஞர்" என்ற குழுவின் கூட்டம், இக்குழுவின் தலைவரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணைத் தலைவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி காணொலி காட்சி வாயிலாகவும், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ், உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம் (ஓய்வு), ஆர். பாலகிருஷ்ணன் (ஓய்வு), ஏ.எஸ். பன்னீர்செல்வன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ்.சுபகுணராஜன், தமிழ்மகன், காணொலி காட்சி வாயிலா கலாப்பிரியா. எஸ்.ராமகிருஷ்ணன், கவிஞர் சல்மா, பொதியவெற்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (15.11.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், முதன்மை செயலாளர்/ சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்/மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. சட்டத்துறை சார்பில் "தமிழினத் தலைவர்

# "கலைஞர் நூற்றாண்டு விழா"வினையொட்டி 5வது மண்டல பேச்சுப் போட்டி!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!

சென்னை, நவ. 16 -

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும் என்று கழக சட்டத் துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு

1.கலைஞரின் பார்வையில் சமூக நீதி மாணவர்கள்

2.கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி - இளம்வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்டக் கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்த தற்போது5வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும்

முதல் பரிசு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்,

மூன்றாம் பரிசு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/ வெண்கலப் பதக்கம், சான்றிதழ். வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்குமுன்புகீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/ தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 50,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/ தாமிரப்பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்**

கே.எஸ்.இரவிச்சந்திரன் (சட்டத்துறைஇணைச்செயலாளர்) - 9840022250,

ஜெ.பச்சையப்பன் (சட்டத்துறை துணைச் செயலாளர்)- 9840260178

கே.சந்துரு (சட்டத் துறை துணைச் செயலாளர்)- 9444006999, கே.ஜே.சரவணன் (தலைமைக் கழக வழக்கறிஞர் ) - 9841057345

**5வது மண்டல பேச்சுப்போட்டி**

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள், போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்

**19 - 11 - 2023 - மாணவர்கள்**

1. டாக்டர்.அம்பேத்கர் அரசுசட்டப்பல்கலைக்கழக வளாகத்தில்உள்ளஅரங்கம், பெருங்குடி, தரமணிரயில்நிலையம்அருகில், சென்னை 113 , 2. அரசுசட்டக்கல்லூரி, விழுப்புரம், 3. சரஸ்வதிசட்டக்கல்லூரி, திண்டிவனம் (தனியார்)

4. பாரதபல்கலைக்கழகம், சேலையூர், சென்னை.

5.செட்டிநாடுஅகெடமி ஆப்ரிசர்ச்&எஜிகேசன், கேளம்பாக்கம், சென்னை.

6 . ஹிந்துஸ்தான் இன்ஸ்டிடியூட்ஆப்டெக்னாலஜி&சயின்ஸ், சென்னை

7.சத்தியபாமாஇன்ஸ்டிடியூட்ஆப்சயின்ஸ்&டெக்னாலஜிபல்கலைக்கழகம், ஜேப்பியார்நகர், சென்னை.

8.எஸ்ஆர்எம்பல்கலைக் கழகம், காட்டாங்குளத்தூர், காஞ்சிபுரம்

9.வேல்ஸ்இன்ஸ்டிடியூட் ஆப்சயின்ஸ், டெக்னாலஜி&அட்வான்ஸ்டுஸ்டடிஸ் (விஸ்டாஸ்), வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை.

10.வி.ஐ.டி. பல்கலைக்கழகம், வேலூர் (சென்னைவளாகம்) 11. டாக்டர்.அம்பேத்கர்அரசுசட்டக்கல்லூரி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்.

**18.11.2023 - (வழக்கறிஞர்கள்)**

இடம் ஓட்டல் ரமடா, எம்.எம்.டி.ஏ. அலுவலகம் அருகில், எழும்பூர்,

தகுதி : விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள்

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நெற்பயிர் காப்பீட்டிற்கான கால வரம்பு நீட்டிப்பு!


## வேளாண் - உழவர் நலத் துறை அறிவிப்பு!

சென்னை, நவ.16-

விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க நடப்பு 2023-2024ஆம் ஆண்டில், சம்பா நெற்பயிர் காப்பீட்டிற்கான காலவரம்பு 22.11.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது வரை சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்யாத விவசாயிகள் காப்பீடு செய்ய வேண்டுமென வேளாண் - உழவர் நலத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

சம்பா/தாளடி/பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட தொடர்முயற்சியால் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 22.11.2023 வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே, சனி (18.11.2023) மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் (19.11.2023) பொது சேவை மையங்கள் செயல்படுவதால் அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணா மலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நவம்பர் 22ஆம் தேதிக்குள் இது வரை சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. நிர்ணயம் செய்யப்பட்ட காலக்கெடுவுக்குள் ஏற்கெனவே பதிவு செய்த விவசாயிகள் மீண்டும் பதிவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



சென்னை வடகிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டி 14.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 11மணியளவில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தேரடி வடக்கு மாட வீதி டி.கே.பி.திருமண மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் – கழக மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர். திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு, மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள் தாசன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசினை வழங்கினர். போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் சான்றிதழ்களும் ஆறுதல் பரிசும் ( TIFFIN BOX ) வழங்கப்பட்டது.நிகழ்ச்சி ஏற்பாட்டினை சென்னை வடகிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில் மற்றும் துணை அமைப்பாளர்கள் லிவிங்ஸ்டன் ராஜ் குமார், என்.கே.பி.நந்தா, லிங்கேஷ், திணேஷ்வேலன் ஆகியோர் செய்திருந்தனர்.

### நெல்லை மாநகராட்சி

# மேயர் பி.எம்.சரவணன் தந்தை மாரியப்ப பிள்ளை மறைவு!

## அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

நெல்லை.நவ.16.

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணனின் அவர்களின் தந்தை பி.பி மாரியப்பபிள்ளை (வயது 73) உடல் நலக்குறைவு காரணமாக நேற்று 15.11. 2023 புதன்கிழமை அதிகாலை 5 மணி அளவில் அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த மாரியப்ப பிள்ளை உடலுக்கு கழக இளைஞர்அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி விட்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

நெல்லை டவுன் சாலியர் தெருவில் உள்ள நல்ல முத்தம்மன் கோவில் பகுதியில் வசித்து வந்தவர் பி.பி. மாரியப்பபிள்ளை வயது 73.இவர் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று 15 ஆம் தேதி புதன்கிழமை அதிகாலை 5 மணியில் அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார். அன்னாருக்கு செல்வசரோஜா என்ற மனைவியும், சரவணன் என்ற மகனும் 2 மகளும் உள்ளனர்.

மேயர் சரவணனின் தந்தை மாரியப்ப பிள்ளை அவர்கள் மறைந்த தகவல் அறிந்ததும் கன்னியாகுமரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,மனோ தங்கராஜ், ஆகியோர் நெல்லைக்கு வருகை தந்து மேயர் சரவணனின் தந்தை மறைந்த மாரியப்பபிள்ளை உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,ஞான திரவியம் எம்.பி,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பிரபாகரன்,பேச்சிபாண்டியன்,ஒன்றிய செயலாளர் அருள்மணி,நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ்,நெல்லை துணை மேயர் ராஜ்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,

மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், அன்டன் செல்லத்துரை,நமச்சிவாயம் துபாய் சாகுல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான்,ரவி, செல்வம், இனியன், மீரான் மைதீன், உள்பட மண்டல தலைவர்கள்,கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக மறைந்த மாரியப்ப பிள்ளை உடலுக்கு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று 15ஆம் தேதி மாலை 4 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அன்னாரது உடல் குருநாதர் கோவிலில் உள்ள தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### நவ. 27 கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!

திருவள்ளூர், நவ. 16

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர் ஆலோசனைக் கூட்டம் திருத்தணி சென்னை நெடுஞ்சாலையில் உள்ள ஜி.ஆர்.டி.ஹோட்டலில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன்த லைமை தாங்கினார். இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இதில் அவர் பேசியதாவது:

நவம்பர் 27ஆம் தேதி அன்று கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் பட்டி தொட்டி எல்லாம் கழகக் கொடியை ஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி மற்றும் ரத்ததான முகாம் மருத்துவ முகாம் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவி அன்னதானம் வழங்குதல் மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் மரக்கன்றுகளை நடுதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வெகு சிறப்பாக நடத்த வேண்டும்.

முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிகளில் கலைஞரின் முழு உருவ வெண்கலச் சிலை உடனடியாக அமைக்கப்படும் என திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக தீர்மானம் நிறைவேற்றப்படு கிறது.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று கழக வரலாற்றில் முத்திரைப் பதித்து, திருப்புமுனை ஏற்படுத்திய திமுக இளைஞரணி முதல் மாநில மாநாட்டினை தொடர்ந்து, வரும் டிசம்பர் 17 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று திமுக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுகிறது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் இருந்து 2000 ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொள்கிறார் என தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பேசிய அவர், வாக்காளர் பட்டியலில், புதிய வாக்காளர்கள் சேர்த்தல் குறித்து நடைபெறும் வாக்கு சாவடி முகாமில் BLA2 BLC முகவர்கள் கலந்து கொண்டு புதிய வாக்காளர்கள் நிறைய பேரை சேர்க்க வேண்டும் எனவும், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய நகரப் பேரூர் கழககளில் உள்ள வாக்குச்சாவடி பணியாளர்கள் சிறப்புக் கூட்டம் நடத்தி தயார் படுத்தவும்

வாக்கு சாவடி முகவர் BLA 2 BLC முகவர்களைக் கொண்ட 100 பேருக்கு ஒருவரை நியமனம் செய்து வாக்காளர்களை குடும்ப வாரியாக பிரித்து சரி பார்க்கும் பணிகளை மேற்கொள்ள மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டி பாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர்,

மு.சுப்பிரமணியம், தொகுதி பார்வையாளர்கள் ராஜா குப்புசாமி சேப்பாக்கம் விபி. மணி, ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர்த்தி ரவி, சி.என். சண்முகம், பி.பழனி, வி. வினோத்குமார், சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், சி.சு.ரவிச்சந்திரன், மோ.ரமேஷ், கே. அரிகிருஷ்ணன், டி.ஆர்.கே. பாபு, எம்.ஜி.ஜோதிக்குமார் உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாநகராட்சி மேயர்

# பி.எம்.சரவணன் தந்தை மாரியப்ப பிள்ளை மறைவு!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 16 -

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணனின் தந்தை பி.பி மாரியப்பபிள்ளையின் மறைவுச் செய்தி அறிந்து முதல்வரும் - கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணனின் தந்தை பி.பி மாரியப்பபிள்ளை அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் மேயர் சரவணன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்12, வார்டு156ல் வி.ஜி.என். லட்சுமி நகர் மற்றும் காவேரி தெருவில் மழைநீர் வடிகால்வாயில் இருந்து 100 குதிரைத் திறன் கொண்ட ராட்சத மோட்டார் மூலம் மணப்பாக்கம் கால்வாயில் மழைநீர் வெளியேற்றப்படுவதை துணை மேயர் மு.மகேஷ்குமார் பார்வையிட்டார். இந்நிகழ்வில், மண்டலக் குழுத் தலைவர்.என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர். ஜெ.செல்வேந்திரன், மண்டல அலுவலர், செயற்பொறியாளர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# சேலம் - இளைஞர் அணி மாநாடு : குமரியில் இரு சக்கர வாகன மாபெரும் எழுச்சிப் பயணம்!

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்!











## 2-வது இளைஞர் அணி மாநில உரிமை மீட்பு மாநாடு: டிசம்பர் 17 - சேலம்!



- ★ நவம்பர் 15 முதல் - 27 வரை!
- ★ 13 நாட்கள் - 8,647 கிலோ மீட்டர்!
- ★ 188 - இரு சக்கர வாகனங்கள்!
- ★ 504 - பிரச்சார மையங்கள்!
- ★ 234 தொகுதிகளிலும் கொள்கை முழக்கப் பயணம்!







சேலத்தில் டிசம்பர் 17ல் நடைபெறவுள்ள 2-வது தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி கன்னியாகுமரியில் மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்று நேற்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின்போது மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தாயகத்தின் தேயிலை!

## இடம் பொருள் கலைஞர் 44

# தாயகத்தின் தேயிலை!

## மறுவாழ்வுத் திட்டம் மூலம் தொழில் வளர்ச்சி!






“தம்பி... டீ இன்னும் வரலை” என்பது இன்று பிரபலமாகிவிட்ட ஒரு திரைப்பட நகைச்சுவை வசனம். ஆங்கிலத்தில் ‘டீ’ என்று அழைக்கப்படும் தேநீரைத் தயாரிக்கப் பயன்படும் தேயிலைக்குப் பின்னுள்ள குருதி செறிந்த வரலாற்றை அறிய நேர்ந்தால், நாம் சுவைக்கும் ஒவ்வொரு மிடறு தேநீரையும் கொஞ்சம் விசும்பலுடன்தான் பருக நேரிடும்.



காபிக்கு அடுத்து இன்று உலகில் அதிகம் விரும்பப்படும் ஒரு பணப் பயிர், தேயிலை. 1800-களில்தான் இந்தியாவில் தேயிலை மூலம் தேநீர் தயாரித்துப் பருகும் வழக்கம், ஆங்கிலேயர்கள் வழியாக அறிமுகமானது. பிறகு 1815 வாக்கில், இலங்கையும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் வர, சில ஆண்டுகளில் தேயிலை அங்கும் அறிமுகமானது.

“1820-ஆம் ஆண்டு முதல் காபி தோட்டங்கள் உருவாக்கப்பட்டு, 1823-ஆம் ஆண்டு முதல் காபி உற்பத்தி தொடங்கியது. மதறாஸ் மாகாண அரசாங்கம், 1815-இல் தஞ்சாவூர் கலெக்டருக்கு, தஞ்சை சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து இலங்கைக்குத் தோட்டத் தொழிலாளர்களை அனுப்பக் கோரி ஒரு கடிதம் அனுப்பியது. கூலி அதிகம் வேண்டும் என்ற நிபந்தனையுடன் காபி தோட்டங்களில் வேலை செய்வதற்காக 150 தொழிலாளர்கள் 1828-இல் இலங்கை சென்றடைந்தனர்” என்று மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜெ.பால சுப்பிரமணியம் தன் கட்டுரை ஒன்றில் பதிவு செய்திருக்கிறார். ஆக, 1823-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் இலங்கையில் மலையகத் தோட்டப் பணிகளுக்காகப் புலம்பெயர்ந்திருக்கிறார்கள். அந்தப் புலப்பெயர்வின் 200-வது ஆண்டு இது!

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், 2008-ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று, ‘டான் டீ’ தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ.338.23 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. அதன் பிறகு சுமார் 10 ஆண்டு காலம் அ.தி.மு.க. அரசு, பரிந்துரைக்கப்பட்ட ஊதியத்தை உயர்த்தாமல் விட்டுவிட்டு, 2019-ஆம் ஆண்டு நவம்பர் 28 அன்று ‘டான் டீ’ தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியத்தை அகவிலைப்படியுடன் சேர்த்து ரூ.350.73 ஆக, அதாவது, ரூ.12.50 மட்டுமே உயர்த்தி வழங்கியது.

2021-ஆம் ஆண்டு மே மாதம் நம் கழக அரசு பொறுப்பேற்றவுடன், இந்த ஆண்டு அந்தத் தொழிலாளர்களின் தினசரி சம்பளம் ரூ.438 ஆக உயர்த்தப்பட்டுள்ளதுடன், 20 சதவிகித போனஸும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### கண்ணியம் போற்றிய மறுவாழ்வு!

இங்கிருந்து தோட்ட வேலைகளுக்காக இலங்கை சென்ற தமிழர்கள, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகினர். சமவெளிப் பகுதியில் மேற்கொள்ளும் விவசாயப் பணிகளைக் காட்டிலும், மலையகத் தோட்டங்களில் பணியாற்றுவது மிகவும் கடினமாக இருந்தது. அதனால், பலர் ஒப்பந்தங்களை மீறி தாயகம் திரும்பினர். அப்படி முயற்சி செய்து காவலர்களிடம் சிக்கிக் கொண்டவர்கள் மீது குற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு பயந்து பலர், ‘நம் தலைவிதி இதுதான்’ என்று மனதைத் தேற்றிக்கொண்டு இலங்கையிலேயே தங்கிவிட்டனர்.

இந்த நிலையில்தான், பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை விடுதலையடைந்த பிறகு, அங்கு தமிழர்கள் மீது சிறிய அளவில் இன ரீதியான தாக்குதல், கொஞ்சம் கொஞ்சமாகத் தலையெடுக்கத் தொடங்கின. அதைத் தொடர்ந்து, இந்திய அரசு இலங்கை அரசுடன் 1964-இல் ஏற்படுத்திக் கொண்ட சாஸ்திரி-சிறிமாவோ உடன்படிக்கையின்படி, இலங்கையிலிருந்து பல நூறு தமிழர்கள், தங்கள் தாயகமான தமிழ்நாட்டுக்குத் திரும்பினர்.

இந்த நிறுவனத்தில் ஏற்கப்பட்ட இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு,

- வாடகை இல்லா குடியிருப்புகள்
- குடிநீர் வசதிகள்
- இலவச மருத்துவ வசதிகள்
- குழந்தைக் காப்பகங்கள்
- ஆரம்பக் கல்வி
- ஊதியத்துடன் கூடிய பிரசவ கால விடுப்பு (84 நாட்கள்)
- ஒவ்வொரு 20 நாள் வேலைக்கும் 1 நாள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு
- ஆண்டுக்கு 14 நாட்கள் உடல் சுகவீன விடுப்புடன், 2/3 பாகம் ஊதியம்
- ஆண்டில் 9 நாட்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுப்பு
- குளிர்காலப் போர்வைகள் அளிக்கப்படுதல்
- வேலை இடங்களில் இலவசத் தேநீர்
- பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கத் தொகை
- வருங்கால வைப்பு நிதி
- பணிக்கொடை
- தொழிலாளர் நஷ்ட ஈட்டுத் தொகை
- போனஸ்

உள்ளிட்ட நல்வாழ்வு வசதிகள் கலைஞர் ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்டன. இவற்றில் பல வசதிகள், இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன.




அவ்வாறு வந்தவர்களில் பலர், நீலகிரி மாவட்டத்தில்தான் அதிக அளவில் குடியேறினர். அதற்கு ஒரு காரணம், அந்த மாவட்டத்தில் தேயிலை பயிரிடப்பட்டு வந்ததால், அங்கு தாங்கள் பிழைக்க ஏதேனும் வழி கிடைக்கலாம் என்று அந்த மக்கள் எண்ணியிருக்கலாம்.

அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களை கண்ணியமான ஒரு மறுவாழ்வுக்குத் தயார்படுத்த, 1968-இல் நம் கழக அரசால் தொடங்கப்பட்டதுதான் ‘தேயிலை வளர்ப்புப் பணித் திட்டம்’.

1968-இல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தார். ஆனால், அவர் புற்றுநோயால் பாதிக்கப் பட்டிருந்த காலம் அது. அப்போது அவர் சிகிச்சையில் இருந்தபோதெல்லாம், அவரது இடத்தில் பொறுப்பாக இருந்து அரசை நடத்தியது முத்தமிழறிஞர் கலைஞர்தான். அதன்படி, ‘தேயிலை வளர்ப்புப் பணித் திட்டம்’ கொண்டு வந்தது கலைஞர்தான். பிறகு 1976-இல், அந்தத் திட்டம், ‘தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்’ என்ற பெயரில் ஒரு நிறுவனமாக உருவாக்கப்பட்டது. ஆங்கிலத்தில் இது ‘டான் டீ’ என்று அழைக்கப்படுகிறது.

### பெண்களுக்கும் வேலை வாய்ப்பு

‘டான் டீ’ தொடங்கப்பட்டதிலிருந்து, இப்போது வரை சுமார் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இன்று சுமார் 6,700 பேருக்கு நிரந்தர வேலையும், அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த இதர உறுப்பினர்கள் என சுமார் 4,500 பேருக்கு விளைச்சல் காலத்துக்கு ஏற்ப தற்காலிக வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் 50 சதவிகிதத்துக்கும் மேல் பெண் தொழிலாளர்கள் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இங்கு பணியாற்றும் பணியாளர் யாரேனும் மரணமடைந்துவிட்டால், கருணை அடிப்படையில் அவர்களின் பணி அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகிறது. 1989-91-ஆம் ஆண்டு காலத்தில், கலைஞரின் ஆட்சியின்போது, இப்படி ஒரு திட்டம் தமிழ்நாட்டில் வேறு எந்தத் தேயிலைத் தோட்ட நிறுவனத்திலும் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தற்சமயம், சுமார் 4,500 ஏக்கர் பரப்பளவில் தேயிலை பயிரிட்டு, அதை நிர்வகித்து வரும் இந்த ‘டான் டீ’ நிறுவனத்தின் தேயிலைத் தூளுக்கு உலகம் முழுவதும் சந்தை இருக்கிறது. நாட்டின் தேயிலை ஏற்றுமதியிலும் இந்த நிறுவனத்தின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாக உள்ளது. ஆக, ஒரு மறுவாழ்வுத் திட்டத்தை, தொழில் வளர்ச்சிக்கான திட்டமாகவும் சிந்தித்துச் செயல்படுத்தியதில் உள்ளது, நவீன தமிழ்நாட்டைக் கட்டமைத்த கலைஞரது தொலைநோக்கின் சிறப்பு!

...வலம் வருவோம்

## ‘தாடிக்காரன் பேத்தி’ – இசைக் காணொலி!

மானுட சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் வரை, தந்தை பெரியார் என்கிற ‘கருத்து நெருப்பை’ சுமந்து செல்ல தலைமுறைகள் பல உருவாகும். அந்த வகையில், தந்தை பெரியாரைப் பாடி மகிழ்கிறார் சிறுமி தனியாழ். சமீபத்தில், அவர் வெளியிட்டுள்ள ‘தாடிக்காரன் பேத்தி’ என்கிற பாடல் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பெரியாரை அறிமுகப்படுத்தி, அவர் வெளியிட்டுள்ள இந்த இசைக் காணொலி இளம் தலைமுறையினரிடம் பெரியாரைக் கொண்டு சேர்க்கும். பாடலின் பின்னணியில் ஒரு குழுவினரின் உழைப்பு இருந்தாலும், சிறுமி தனியாழ் உணர்வுப்பூர்வமாக பெரியாரை உள்வாங்கிப் பாடுவது நெருக்கமாக உணர வைக்கிறது.

தன் வாழ்நாள் முழுவதும் மானுட சமத்துவத்துக்காக நேர்மையுடனும் துணிச்சலுடனும், தன்னலம் பாராமல் எதிர்த்துப் போராடிய பெரியார், தலைமுறைகள் கடந்தும் ஈர்க்கப்படுகிறார் என்பதை ‘தாடிக்காரன் பேத்தி’யில் கண்டு ரசிக்கலாம்.

## :ப்ளாஷ்பேக்



### பரிசாக சுவர் கடிகாரம்!

1995 -ஆம் ஆண்டு செப்டம்பர் 4 அன்று சேலம் மாவட்டத்தில், தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது. அன்றைக்கு சேலம் மத்திய மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், என்னால் இயன்ற அளவுக்கு நிதி வசூல் செய்து தலைவர் கலைஞர் அவர்களிடம் அளித்தேன். என் கழகப் பணியைப் பாராட்டும் விதமாக, சுவர் கடிகாரம் ஒன்றை அன்பளிப்பாக அதே மேடையில் தலைவர் கலைஞர் எனக்கு வழங்கினார். உடன் ஆற்காட்டார் அவர்களும், இன்றைய கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களும் இருந்தனர்.



கணேசன்

**-கொ.மு.கணேசன்,**
**முன்னாள் துணை அமைப்பாளர்,**
**கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, சேலம் மத்திய மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தேவையற்ற செலவுகள்

**1958 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையைப் புறக்கணிப்பதாக அறிஞர் அண்ணா அறிவித்தார். "ஆளுநர் என்ற பதவியே தேவையற்றது, ஒழிக்கப்பட வேண்டியது, ஆளுநருக்காகவும் அவரது பரிவாரங்களுக்காகவும் ஆண்டுதோறும் செலவிடப்படும் பெரும் தொகையினால் எந்தவித உருப்படியான பலனும் இல்லை என்பதால், அவை அத்தனையும் வீண் செலவு. நாட்டின் இன்றைய பொருளாதார நிலையில் அவ்வளவு பெருந்தொகையைப் பாழாக்குவது காலத்திற்கு ஒவ்வாதது" என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 301




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131